பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 01 புதன்கிழமை (13.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 79

## கொழும்புத்துறை கரையோரப் பகுதிகளில் நேற்றிரவு 20 நிமிட நேரமாக மோதல்

### மக்கள் பலரும் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,பெப்.13

கொழும்புத்துறை மற்றும் துண்டி கடற்கரையோரப் பகுதிகளில் நேற்றிரவு 8.30 மணி முதல் சுமார் 20 நிமிடங்களாக கடும் மோதல் இடம்பெற்றது.

பல்குழல் ஷெல் தாக்குதல் மற்றும் சரமாரியான தொடர் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் நகரப்பகுதி அதிர்ந்த வண்ணம் இருந்தது.

எதிர் எதிரே துப்பாக்கிச் சூட்டு மோதல்கள் நடைபெறுவதுபோன்று - மிக அண்மித்ததாக - நகரப் பகுதியில் இடைவிடாது சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. அவை ஓய்வதற்கு சுமார் 20 நிமிடங்கள் சென்றன.

கடற்கரையோரத்துக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் காணப்பட்டது என்றும் -

அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அதனை

(10ஆம் பக்கம் பார்க்க)

## மேற்கு நாட்டு ராஜதந்திரிகளை தமிழ்க் கூட்டமைப்பு சந்திப்பு

கொழும்பு,பெப்.13

இலங்கையின் தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் தமிழர்கள் அனுபவித்துவரும் அவலநிலை தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு விளக்கி வருகின்றது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் மாவை சேனாதிராஜா மற் றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகிய எம்.பிக் கள் அடங்கிய உயர் குழுவே இந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

# தள்ளாடி இராணுவ முகாம் மீது புலிகள் கடும் ஆட்லறித் தாக்குதல்!

## 6 படையினர் பலி; 18 பேர் படுகாயம்

கொழும்பு,பெப்ரவரி13

**- மன்னார், தள்ளாடி இராணுவ முகாம் சூழலை இலக்குவைத்து நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் நடத்திய 130 எம்.எம். பீரங்கித்(ஆட்லறி) தாக்குதலினால் ஆறு இராணுவத்தினர் உயிரிழந்தனர். பதினெட்டுப் படையினர் வரை படுகாயமடைந்தனர்.**

நேற்றுக் காலை 8 மணி முதல் இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களினால் மன்னார் நகரப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி விரைந்தனர். இதனால் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

மன்னார் பாலத்தின் ஊடான வெளியிடங்களுக்கான சகல வாகனப் போக்குவரத்துக்களும் பிற்பகல் 2 மணிவரை துண்டிக்கப்பட்டிருந்தன என்று மன்னார் மக்கள் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

தள்ளாடி இராணுவ முகாமை இலக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக சுதந்திரம் வேண்டி நாளை பாதயாத்திரை நிகழ்வு

கொழும்பு,பெப்.13

'ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக இணைவோம்' என்ற கருப்பொருளில் ஊடக அடக்குமுறைக்கு எதிரான இயக்கத்தின் ஏற்பாட்டில் பாதயாத்திரை நிகழ்வு ஒன்று நாளை கொழும்பில் இடம்பெறவிருக்கிறது.

நாளை பி.ப. 2 மணிக்கு கொழும்பு, கொம்பனி வீதியில் அமைந்துள்ள டி மெல் பூங்காவில் இருந்து இந்தப் பாதயாத்திரை ஆரம்பமாகும். அங்கிருந்து யூனியன் பிளேஸின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கி, பல்குழல் ஏவுகணையால் நேற்றுப் பகல் அதிர்ந்தது மன்னார்!

### அதனால் பதற்றம்; வழமை நிலைமை பாதிப்பு; மக்கள் முடக்கம்

மன்னார்,பெப்.13

தள்ளாடி இராணுவ முகாம் பகுதி மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை திடீரென நடத்திய பீரங்கித் தாக்குதல்களாலும் -

அதையடுத்து, அதற்குப் பதிலடியாக மன்னார் மற்றும் புறநகர்ப் பிரதேசங்களில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கிப் படையினர் மேற்கொண்ட பீரங்கி, ஷெல் மற்றும் பல்குழல் ஏவுகணைத் தாக்குதல்களாலும் -

நேற்றுக்காலை மன்னார் நகரமும் சுற்றாடலும் அதிர்ந்தன.

காலை 8 மணி முதல் 10.45 மணிவரை விடாது முழங்கித் தள்ளிய ஷெல்கள், பீரங்கிகளினால் மன்னார் நகர மக்கள் பெரும் பீதியில் உறைந்தனர்.

முன்பின் கேட்டிராத வகையில் பலத்த அதிர்வுடனும், பேரிரைச்சலுடனும் வெடித்துச் சீறிப் பாய்ந்து சென்ற பீரங்கிகளின் நாராசசத்தத்தால் மக்கள் செய்வதறியாது திகைத்தனர்.

நகரத்திலும் சுற்றாடலிலும் வழமை

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஏ.பி.செய்திச் சேவையின் படப்பிடிப்பாளர் கைது!

கொழும்பு,பெப்.13

கொழும்பு இஸிப்பத்தான கல்லூரியை அண்மித்த பகுதியைப் படம் எடுத்தார் என்ற சந்தேகத்தில் ஏ.பி.செய்தி சேவையின் படப்பிடிப்பாளர் 'கெமுனு அமரசிங்க கல்லூரி மாணவர்களின் பெற்றோரால், நேற்றுக் காலை பிடிக்கப்பட்டு நாரஹென்பிட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவர் படம் எடுத்த பகுதியில் அமைச்சர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்பினார் மனோ கணேசன்

கொழும்பு,பெப்.13

உயிர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஒன்றரை மாதங்களாக வெளிநாட்டில் தங்கியிருந்த மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் நேற்று நண்பகல் நாடுதிரும்பினார்.

நண்பகல் 12 மணியளவில் கொழும்பு, கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த மனோ எம்.பியை அங்கு ஐ.தே.கவின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அந்தோனியார் ஆலய வளாகத்தில் படையினரின் தற்காலிக முகாம்கள்

யாழ்ப்பாணம்,பெப்.13

மன்னார் மாவட்டத்தில் மிக அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து அந்தோனியார் ஆலய தேவாலய வளாகத்தில் தற்காலிக படை முகாம்கள் அமைக்கப்பட்டன.

- இவ்வாறு மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட் திரு அன்ரனி விக்டர் சூசை பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

மன்னார் தள்ளாடியில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலயத்தில் படையினர் முகாமிட்டிருந்தனர். அங்கு வழிபாடுகள் நடைபெறுவதில்லை. இதனால் பொது மக்கள் எவரும் ஷெல் தாக்குதலில் பாதிக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.

தாக்குதலில் சேதமடைந்த தேவாலயத்தைப் பார்வையிடுவதற்காக மன்னார் மாவட்ட கட்டளையிடும் தளபதியைக் கோரினோம். பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி பார்வையிட முடியாது என்று தளபதி கூறினார்.

புனித அந்தோனியார் தேவாலயம் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபடும் ஒரு தேவாலயம். அண்மையில் இடம்பெற்ற போர்ச் சூழலை அடுத்து தேவாலயத்திற்கு செவ்வாய்க்கிழமை மட்டும் மக்கள் வழிபடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மிக அண்மையில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து அந்த தேவாலயத்தின் வளவினுள் தற்காலிக படைமுகாம்கள் அமைக்கப்பட்டன.

இதனால், அங்கு வழிபாடுகள் நடைபெறவில்லை. அதனால், ஷெல் தாக்குதல்கள் நடந்தவேளை மதத் தலைவர்களோ அல்லது மக்களோ அங்க இருக்கவில்லை என்றார்.

(அ-2)

## 'சமாதானம் 2005' - இராட்சத ஷெல் புலிகளின் தயாரிப்பு போர்முனையில்!

கொழும்பு,பெப்.13

பேரழிவு தரக்கூடிய ஷெல் அல்லது பீரங்கி வகையைச் சேர்ந்த இராட்சத ஏவுவெடி கருவி ஒன்றை மன்னார் களமுனையில் விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருகின்றனர் என்று இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் அரசுத் தலைமைக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றன என்று அறியவருகின்றது.

'சமாதானம் - 2005' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் கருவி முன்னர் புலிகள் தாங்களே தயாரித்துப் பயன்படுத்திய 'பசீலன்' ஷெல் வகையை ஒத்ததாக இருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

'சமாதானம் - 2005' என்ற இந்தப்பெயர் இதற்கு புலிகள் சூட்டியதா அல்லது இராணுவப் புலனாய்வுப் பிரிவு அந்தப் பெயரில் அக்கருவியை இனங்கண்டு குறிப்பிடுகின்றதா என்பதை அறியமுடியவில்லை.

இந்தக் குண்டு சுமார் முந்நூறு கிலோ வெடிப் பொருளுடன் சுமார் ஐந்நூறு கிலோ எடையுடையதாக இருக்கும் என

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணலாற்றில் 10 இராணுவத்தினர் பலி; 25இற்கும் அதிகமானோர் படுகாயம்!

## முன்னேற்ற நகர்வு முயற்சியின்போது

கொழும்பு,பெப். 13

மணலாறுப் பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற கடும் மோதலில் 10 இராணுவத்தினர் உயிரிழந்தனர். இருபத்தியைந்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

அப்பகுதியில் உள்ள விடுதலைப் புலிக்ளின் நிலைகளை நோக்கி இராணுவத்தினர் முன்னேறிய வேளை இடம்பெற்ற கடும் மோதலின் போதே இவர்கள் கொல்லப்பட்டனர் எனத் தெரிகின்றது.

நிலக்கண்ணி வெடி மற்றும் மிதிவெடியில் சிக்கியே அநேக இராணுவத்தினர் உயிரிழந்தனர் அல்லது காயமடைந்தனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மணலாற்றில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கி முன்னேறிய படையினர் அவர்களின் பதுங்கு குழிகளை அழித்ததுடன் 13 விடுதலைப் புலிகளைக் கொன்றனர் என்றும் தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர், இதன்பின்னர் படையினர் தமது நிலைகளுக்கு மீளத் திரும்பினர் என்றும் குறிப்பிட்டார்.

மோதல் ஒன்றில் தமது தரப்பில் இவ்வளவு உயிரிழப்புகள் ஏற்பட்டதை இப்படி இராணுவம் ஏற்றுக் கொள்வது அண்மைக்காலத்தில் வழமைக்கு மாறானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை -

கொக்குத்தொடுவாயில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதும் தாம் தாக்குதலை மேற்கொண்டனர் எனவும் -

இதன்போது 7 புலிகள் கொல்லப்பட்டனர் எனவும் -

அரச பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (உ)

# 3 புலிகளின் சடலங்கள் படையினர் ஒப்படைப்பு

கொழும்பு,பெப்.13

வவுனியா, பெரியதம்பனை, கல்மடுப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்தவர்கள் என்று கூறப்படும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மூவரின் சடலங்களை நேற்று இராணுவத்தினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக வன்னியில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, இச்சடலங்கள் நேற்றுமுன்தினம் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. (சி)

# ஆசிரியை உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் திங்களன்று சரண்

யாழ்ப்பாணம்,,பெப்.13

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

கச்சாய் கொடிகாமத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியை (வயது 47), அவரது சகோதரி (வயது 41), சகோதரியின் மகன் (வயது 3) ஆகியோரே சரணடைந்துள்ளனர். இவர்களுடன் கரவெட்டி யைச் சேர்ந்த பஸ் நடத்துநர் (வயது 52) ஒருவரும் சரணடைந்துள்ளார்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப் பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

(அ-68-302)

# கதிர்காமத்தில் அமுக்கவெடி!

கொழும்பு,பெப்.13

கதிர்காமம், கித்துன்பவுவ - யோதகண்டிய பிரதான வீதியில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சுமார் பத்துக் கிலோ எடைகொண்ட அமுக்கவெடி ஒன்றைக் கண்டு பிடித்தனர் என்று படைத் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

ஒரே நேரத்தில் வெடிப்பதற்காக மேலும் மூன்று நிலக்கண்ணிவெடிகள் இந்த அமுக்க வெடியுடன் பொருத்தப்பட்டிருந்தன என்றும் படைத்தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது. (சி)

# மெய்வன்மைப் போட்டிகள்

வலிதென்மேற்கு,பெப்,13

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயம், வட்டு பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை பி.ப 1மணிக்கு வட்டுக்கோட்டை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த போட்டியில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசாவும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற பொறியியலாளர் பொ.சண்முகானந்தசிவம், என்.முருகானந்தன்-ஆசிரியர் ஆலோசகர் (விசேட கல்வி), க.மணிமாறன் - ஆசிரிய ஆலோசகர் தகவல் தொழில்நுட்பம்) ஆகியோரும் கலந்துகொள்வர்.(203-135)

* * *

வலிவடக்கு,பெப்.13

இனுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டிகள் இன்று பி:ப 1.30மணிக்கு அதிபர் அ.சதானந்தன் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி மு.பஞ்சலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் தெல்லிப்பழை கல்விக்கோட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் க.சிவராசா, ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் கிளை பதவி நிலை அலுவலர் செ.சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (203-86)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.13

புத்தூர் விஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித் திரவடிவேல் கலந்து கொள்வார். (203)

**படிவம்**

க.பொ.த (உ.த) ஆகஸ்ட் 2007 பரீட்சை மூலம் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக அநுமதிக்குரிய தகைமை காண் (Apptitude Test) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

## பணிப்பெண்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் வர்த்தக குடும்பம் இரண்டிற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வீட்டுப் பணிப் பெண்கள் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல. 3062

பே/பா உதயன்

(அ/551448)

## காணி விற்பனைக்கு

சிவன்கோயிலடி, தும்பளை வீதியில் ¾ பரப்புக் காணியுடன் கட்டிய குறையில் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: சு.நந்தகுமாரன்,

தும்பளை வீதி, பருத்தித்துறை.

T.P. 0775146059, 2263664

(71113)

## இதய அஞ்சலி



அரியாலை பிரதான பொது அமைப்புக்களான அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்டம், அரியாலை ஐக்கிய கழகம், அரியாலை அபிவிருத்திச் சங்கம், அரியாலை கலாமன்றம், அரியாலை சனசமூக நிலையம் மற்றும் அரியாலை மகாமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றின் நிர்வாகங்களில் பல ஆண்டுகளாக பிரதான பதவிகளை வகித்து சமூக சேவையாற்றிய அரியாலையூரின் பெருமகனும் மறைந்த நாடக ஆசான் அண்ணாவி சபாபதியின் நெறியாள்கையிலும் மற்றும் அதன் பின் வந்தோருடனும் பல புகழ் பெற்ற வெற்றி நாடங்களில் பங்கேற்று கலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவருமான

**சுப்பிரமணியம் பாலசுந்தரம்**

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

(71122) - அரியாலையூர் நண்பர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 03 ★ 07 ★ 1950



விண்ணில் 05 ★ 02 ★ 2006

**அமரர் வீரசிங்கம் பவசிங்**

திதி: 13.02.2008

*மரணித்துப் போன எம்*
*மனிதருள் மாணிக்கமே - நீர்*
*சயனித்துப் போய் வருடம்*
*இரண்டாகிப் போனதுவோ - இவ்*
*அவனிதனை விட்டு நீர் தூரம் சென்றாலும்*
*பவனி வரும் என்றும் உம் அன்பு நினைவுகள்.*

*கோகுல வீதி,*
*கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.* குடும்பத்தினர்

(71117)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பாக்கியம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாக்கியம் நேற்று (12.02.2008) செவ் வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் மற்றும் இராசமணி ஆகியோரின் சகோதரியும் சண்முகலிங்கம் (ஜேர்மன்), இந்திராணி, நிர்மலாதேவி, சத்தியலிங்கம்(கனடா),சத்திராதேவி(கனடா), கணேசலிங்கம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி, குலசேகரம்பிள்ளை காலஞ்சென்றவர்களான நேசலிங்கம், ஆனந்தராஜா மற்றும் பிரியதர்சினி ஆகியோரின் மாமியாரும் சர்மிளா, சுனிதா, தர்மோதா, ராஜ்மோகன், எழிலரசி, கலையரசி, தமிழரசி, மயூரி, கபிஷன், ரஜீபன், தினோத், ஜெனித், நிவேதா, நிலானி, அபினாஷ், அப்சறன், ஆசிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2008) புதன் கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பதிவாளர் ஒழுங்கை,*
*திருநெல்வேலி.* (71119)

தகவல்: பிள்ளைகள்

## கனகசபாபதி சரவணபவன் (ராசா)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி சரவணபவன் நேற்று (12.02.2008) செவ்வாய்க் கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி - தனலட்சுமி தம்பதியினரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற திரு. திருமதி கதிரேசு தம்பதியினரின் மருமகனும் மங்கையக்கரசியின் அன்புக் கணவரும் தனலட்சுமி, தங்கேஸ்வரி, இராஜலட்சுமி, சரோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராசா, அகிலேஸ்வரி, கோபாலகிருஸ்ணன், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சண்முகசுந்தரம் ஆகியோரின் சகோதரரும் பரமேஸ்வரி, மனோன்மணி, ரஜனி, காலஞ்சென்ற கார்த்திகேசு ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகுமார், சிவகுமார், திருக்குமார், தெய்வேந்திரம் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2008) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*றோயல் சேவிஸ் ஸ்ரேசன் ஒழுங்கை,*
*உடுவில்,*
*சுன்னாகம்.* (அ/551447)

தகவல்: மங்கையற்கரசி (மனைவி)

## கனகசபாபதி ஐயர் தேவமணி



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி ஐயர் தேவமணி நேற்று (12.02.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி ஐயர் கனகசபாபதி ஐயரின் மனைவியும், யசோதரன் (சங்கானை ப.நோ. கூ.சங்கம்), லதாமதி (சமூகசேவைத் திணைக்களம், திருகோணமலை), சுரேந்திரசர்மா(வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோயில்) அமரர் யாழரசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தா (வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி), சுபத்திராதேவி (யாழ். சன்மார்க்க வித்தியாலயம்), மகேஸ்வரக்குருக்கள்( வங்களாவடி, வேலணை) ஆகியோரின் மாமியாரும் சுதர்சனன், சுந்தர்ராம், ஸ்ரீ வைஷ்ணவி (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்) சுவாதிகா, கோபிசன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ரிசிகேஷன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் திருமதி.தேஜோவதி, கணேசரட்ண சர்மா (திருமலை) திருமதி பத்மா சோமகாந்தன் (கொழும்பு) அமரர்கள் திருமதி விமலாதேவி சர்வேஸ்வரசர்மா (திருமலை), சர்வேஸ்வரக்குருக்கள் (கொக்குவில்) இரகுநாதசர்மா (பாலாவோடை) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (12.02.2008) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*28, பிரப்பன்குளம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்* (71121)

தகவல்: குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் சிவபாலன் (பாலு)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் மாரீசன்கூடலை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரணியம் சிவபாலன்(பாலு) நேற்று (12.02.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவஞானமலரின் அன்புக் கணவரும் நிசாந்தினி, டிலானி, (மாணவர்கள், இளவாலை கன்னியர் மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாலிங்கம்(லண்டன்), ஜெயரட்ணம், மகேந்திரராணி, சிவநாதன், பவளராணி, புஸ்பராணி, ஆகியோரின் சகோதரரும் முத்துலச்சுமி, தவராணி(சித்திரா), செல்லப்பா, அமரர் சண்முகரத்தினம், கமலநாயகி, இராசையா, சிவஞானசேகரம் (திருகோணமலை), சிவனேஸ்வரன், அமரர் சந்திரசேகரம், சாந்திமலர்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.02.2008) புதன்கிழமை காலை 10 மணியளவில் முன்னானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரீசன்கூடல்,*
*இளவாலை.* (அ/551449)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வலிகாமம் மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அதிபர் கே.கணேஷ் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் திருமதி பாபு தேவநந்தினி காணப்படுகிறார். விருந்தினர்களுடன் பிரதேச செயலக ஊழியர்கள் நிற்பதை இரண்டாவது படத்தில் காணலாம். (203)

## தரம்-5மாணவர்களுக்கு தென்மராட்சியில் மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.13

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 5வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை- 2 நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகளை நாளை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும்.

பரீட்சை புள்ளிப் பகுப்பாய்வினை உடன் தயாரித்து எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(203-207)

## ஏப்ரல் 23 ஆம் திகதியை புத்தக தினமாக அனுஷ்டிக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களை, எதிர்வரும் ஏப்ரல் 23 ஆம் திகதியை உலக புத்தக தினமாக அனுஷ்டிக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 23 ஆம் திகதி சர்வதேச அளவில் புத்தக தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருவதால் அன்றைய தினத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் தமது பொது நூலகங்களில் புத்தக தினத்தைக் கொண்டாடுமாறும் அந் நிகழ்வுகளில் பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரைப் பங்குபெறச் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

இளம் சந்ததியினர் மத்தியில் நூல்களை வாசிக்கும் பழக்கம் பல்வேறு காரணங்களாலும் அருகி வருகின்றது.

இக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாகவும் நூல்களின் மேலான ஈர்ப்பு அதிகரிக்கும் விகிதத்திலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அமைந்திருத்தல் வேண்டும் எனவும் -

அதாவது இளம் சந்ததியினர் நூல்களில் நாட்டம் கொள்ளத்தக்கவகையிலும் அவர்களே கருத்துக்களைப் பிரதிபலிக்கத்தக்க வகையிலும் செயற்பாடுகள் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும் என்றும்- ஆணையாளர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

(203-207)

## சங்கானைப் பிரதேச விவசாயிகளிடம் ப.நோ.கூ. சங்கம் நெல் கொள்வனவு

யாழ்ப்பாணம்,பெப்.13

சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதேச மக்களின் நலன் கருதி அவர்கள் உற்பத்தி செய்த நெல்லை கொள்வனவு செய்யவுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தாம் உற்பத்தி செய்த நெல்லை விற்பனை செய்ய விரும்பும் மக்கள் தமக்கு அருகில் உள்ள சங்க கிளைகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

பெரிய வெள்ளை, பெரிய சிகப்பு, சின்ன சிகப்பு, 500-1, ஏ.ரி-322 ஆகிய நெல் இனங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று கூறப்பட்டது. (203-224)

## சாவகச்சேரி நகர சபையின் வாசிப்பு மாத விழா

யாழ்ப்பாணம்,பெப்.13

சாவகச்சேரி நகர சபையின் தேசிய வாசிப்பு மாத விழா எதிர்வரும் 19ஆம் திகதி நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி பொது நூலகம், மீசாலை, நுணாவில், ஆகிய கிளை நூலகங்கள் ஆகியவற்றால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டிகள் மாணவர்கள், வாசகர்கள், சனசமூக நிலையத்தினர் ஆகியோரிடையே நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விழாவிற்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கலந்து கொள்வார். (203-207)

## வலிகாமம் பகுதியில் ஞாயிறு பெய்த மழையால் நெல் அறுவடையும், சூடுமிதிப்பும் பாதிப்பு

வலி.கிழக்கு,பெப்.13

வலிகாமம் மேற்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் ஞாயிற்றுக்கிழமை மாலை திடீரென பெய்த கனத்த மழையினால் விவசாயிகளின் பெரும்போக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் உள்ள வயல்களில் பெரும்போகத்தின்போது பயிரிடப்பட்ட நெற்பயிர்களை விவசாயிகள் அறுவடை செய்துகொண்டிருந்த சமயம் அறுவடை செய்த நெற்கதிர்களைச் சூடு மிதித்துக்கொண்டிருந்தவேளையில் திடீரென மழை பெய்துள்ளது.

இந்த திடீர் மழையினால் அறுவடை செய்து வயல்களில் போடப்பட்ட நெற்கதிர்கள் எல்லாம் நனைந்துவிட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த மழையை அடுத்து நெல் அறுவடை, சூடு மிதிப்பு வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன எனவும் வெயிலில் நெற்கதிர்கள் காய்ந்த பின்னர் தான் அறுவடை வேலைகளை ஆரம்பிக்க முடியும் என்றும் விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது. (203-224-100)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.13

கச்சாய் அ.த.க. பாடசாலை மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் அதிபர் கே.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) என்.சத்தியநாதன் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.13

வரணி, குடமியன் அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) பீ.முத்துலிங்கம் கலந்துகொள்வார். (1-207)

## சமகாலச் சூழலைக் கருத்தில் கொண்டு மக்கள் பொதுநலநோக்குடன் வாழவேண்டும்

### அரச அதிபர் கே.கணேஷ் தெரிவிப்பு

அச்சுவேலி,பெப்.13



யாழ்.மாவட்டமக்கள் சமகாலச் சூழலைக் கருத்தில் கொண்டு சுய நலத்தைக் கைவிட்டு பொது நலத்தோடுகூடிய ''எல்லோரும் மற்றவர் களுக்காக'' என்ற உயர் நோக்கோடுவாழவேண்டும்.

இன்று மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கும் பாவனைப் பொருள்களின் விலை உயர்வு, பொதுச்சந்தைகளில் காணப்படும் ''தரகர்'' தொல்லை என்பனவற்றுக்கு விரைவில் பெருத்தமான தீர்வுகாணப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ்.

இடைக்காடு பேரின்பம் தோட்டத்தில் கண்டமுள் மாதிரி சோளச் செய்கை வயல் விழா விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

வயல் விழாவில் யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

யாழ்.மாவட்டத்துக்கான அனைத்துப் பொருள்களும் வெளிமாவட்டத்தில் இருந்து கொண்டுவரப்படவேண்டும் என்ற நிலையை மாற்றி உள்ளூரில் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களை எமது பிரதேசத்திலேயே உற்பத்தி செய்ய வேண்டும்.

இந்தவகையான முன்னெடுப்புகளை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் இந்தவருடம் விதைநெல் உற்பத்தியில் புதிய முயற்சியை மேற்கொண்டு முழுமையான வெற்றியைப் பெற்றுள்ளது.

அதன்மூலம் 2008 காலபோக நெற்செய்கைக்கான விதைநெல்லை தென்னிலங்கையில் இருந்து கொண்டுவர வேண்டிய தேவை இல்லை என்ற தன்னிறைவு நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தவகையில் சோளச் செய்கையிலும் புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது. குடாநாட்டில் சோளச்செய் கைக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அதற்கு ஏற்ப விவசாயிகள் சோளச் சொய்கையில் ஈடுபடுவது பயனும் வருவாயும் உள்ள தொழில்முயற்சி யாகும்.

வலி.கிழக்குப் பிரதேசசெயலாளர் சீ.ஏ. மோகன்ராஜ் உரையாற்றும்போது, இன்றைய சூழலில் கால்நடைகளின் தீவனத் தயாரிப்புக்கும் மக்களுக்கான போஷக்குக் குறைக்கும் சோளத்தின் தேவை அதிகரித்துள்ளது.

அந்தவகையில் சோளச்செய்கையில் விவசாயிகள் ஈடுபடுவது அர்த்தமுள்ளது; வரவேற்கத்தக்கது. இந்த நேரத்தில் வெளி மாவட்ட சந்தை வாய்ப்பைக் கருத்தில் கொண்டு வெங்காயத்தை பெருமளவில் செய்கை பண்ணி, சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் நட்ட மடைய வேண்டிய தேவையில்லை. எனவே காலச்சுழலை கருத்தில்கொண்டு பயன் உள்ள உற்பத்திகளில் ஈடுபடவேண்டும் எனத் தெரிவித்தார். (203-11)

## சிங்கள வாய்மொழிப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.13

அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயற்திட்டத்தின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட இலவச சிங்கள வகுப்பில் கல்வி பயின்றோருக்கான வாய்மொழிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இந்த வகுப்பில் கல்வி பயின்றவர்களை யாழ்.செயலகத்தில் அமைந்துள்ள இந்துசமய கலாசார திணைக்கள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## பயணிகளால் எடுத்து வரப்படும் பொதிகள் குறித்து வாகன நடத்துனர், சாரதிகள் கவனமெடுக்க வேண்டும்

### இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்து

வலி.தென்மேற்கு,பெப்.13

வாகனங்களின் பயணம் செய்யும் போது பயணிகள் எடுத்துவரும் பொதிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சாரதி மற்றும் நடத்துனர்களிடம் இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் மினிபஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலின்போது இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இவர் மேலும் தெரிவிக்கையில்- பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இவ்வாறான அறிவித்தல்கள் விடுக்கப்படுகின்றன எனவே இவ் விட யத்தில் கவனமெடுத்துச் செயற்பட வேண்டும்.

சந்தேகத்துக்கு இடமான பொதிகள் எதுவும் காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள இராணுவ முகாமிற்கு அறிவிக்க வேண்டும்.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் நலன் கருதி இந்த வேண்டு கோளை விடுக்கின்றேன்-என்றார். (203-135)

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க 18ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.13

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 18ஆவது ஆண்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்க விடுதியில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி ந. சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

## முழுநேர விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்.

யாழ்ப்பாணம்,பெப்.13


சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவினர் பிரதேசத்தில் முழுநேர விவசாயிகளாகச் செயற்படுவோருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கவுள்ளனர்.

அறவழி நிலையத்தின் விடுத்த வேண்டுகோளையடுத்து கல்வயல் விவசாய சம்மேளனத்தினர் மூன்று முழுநேர விவசாயிகளைத் தெரிவுசெய்து பெயர்ப்பட்டியலை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தனர். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை எம்.ஜி.ஆர். ஒருபோதும் மனமார ஆதரிக்கவில்லையாம்

## ராஜீவ் மிரட்டி சம்மதம் பெற்றார் என்கிறார் முன்னாள் அ.தி.மு.க.அவைத் தலைவர்



இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தமிழக முன்னாள் முதல் வரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனருமான எம்.ஜி.ஆர். எதிர்த்ததால் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் மிரட்டப்பட்டார் என்று அதிமுகவின் முன்னாள் அவைத் தலைவர் புலவர் புலமைப் பித்தன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து வெளியாகும் "குமுதம் ரிப்போர்ட்டரில" இது தொடர்பான விவரம் வெளிவந்துள்ளது.

"புலிகள் நடமாட்டம்" தொடர்பாக சட்ட மன்றத்தில் ஜெயலலிதா எழுப்பிய சர்ச்சை, காங்கிரஸ் நடத்திய வெளிநடப்பு, முதல்வரின் மறுப்பு என்று தமிழகத்தில் அனல் பறந்து கொண்டிருக்கும் வேளையில், அ.தி.மு.க.வின் முன்னாள் அவைத்தலைவர் புலவர் புலமைப்பித்தன், "ஒரு பூலோகத்தின் பலி பீடமாய்" என்ற ஈழ ஆதரவுப் புத்தகத்தை எழுதி பரபரப்பைப பாய விட்டிருக்கிறார். அவரை நாம் சந்தித்தோம்.

"அ.தி.மு.க. புலிகள் இயக்கத்தை எதிர்ப்பது நியாயமல்ல. தமிழ் ஈழம்தான் ஒரே தீர்வு என்று எம்.ஜி.ஆர். தீர்க்கமாக நம்பினார். அதற்கு மாறாக ஜெயலலிதா செயல்படுவது சரியல்ல" என்கிறீர்களே. எப்படி? என்று கேட்டோம்.

"மக்கள் திலகம் என்ற அந்த மாமனிதர் தமிழ் ஈழ விடுதலையை மனமார ஆதரித்தார். அதற்காக விடுதலைப் புலிகளுக்கு அவர் கோடி கோடியாக பணத்தை வாரிக் கொடுத்தார். ஒருகட்டத்தில் தம்பியிடம் (பிரபாகரனிடம்) "ஆயுதப்புரட்சி மூலம் தமிழ் ஈழத்தைப் பெற எவ்வளவு பணம் வேண்டும்?" என்று கேட்டார். தம்பி கொஞ்ச நேரம் யோசித்து "நூறு கோடி தேவைப்படும்" என்றார். "சரி பார்க்கலாம்" என்றார் எம்.ஜி.ஆர். அந்த அளவுக்கு தமிழ் ஈழம்தான் ஒரே தீர்வு என்று நம்பியவர் எம்.ஜி.ஆர்.

### ஒரு காலத்தில் இவரும் ஆதரித்தவர்தான்

அந்த மாமனிதரால் நிறுவப்பட்ட அ.தி.மு.க.வின் தலைவியாக இருக்கும் ஜெயலலிதா ஏன் புலிகளை எதிர்க்கிறார்? புலிகளை அவர் ஆதரிக்க வேண்டாம். சட்டமன்றத்தில் அவர்களுக்கு எதிராகத் தேவையில்லாமல் சர்ச்சை எழுப்பாமலாவது இருக்கலாமே. ஒரு காலத்தில் ஜெயாவும் புலிகளை ஆதரித்தவர்தான். 1989 ஆம் ஆண்டு லண்டனில் நடக்க இருந்த தமிழ் ஈழ விடுதலை மாநாட்டில் நானும் கலந்துகொள்ள வேண்டுமென்று மறைந்த தம்பி ஜோனியை பிரபாகரன் என்னிடம் அனுப்பி வைத்தார்.

ஒருநாள் நான் புரட்சித்தலைவியோடு பேசிக் கொண்டிருந்தபோது, இதைச் சொல்லி "நான் லண்டன் போய் வரட்டுமா?" என்று கேட்டேன். அதற்கு அவர், "ஆமாம். ஜோனி என்னைக்கூட வந்து பார்த்தார். நீங்கள் போவதென்றால் மகிழ்ச்சி, போய் வாருங்கள்" என்றார். அதை இன்னும் அவர் மறந்திருக்க மாட்டார் என்று நம்புகிறேன். இப்போது ஏன் அப்படி மாறிப்போனார் என்பது புரியவில்லை. நான் மீண்டும் அவருக்குச் சொல்கிறேன். நீங்கள் ஆதரிக்க வேண்டாம். எதிர்க்காமலாவது இருங்கள்.

இதுவரை ஒரு லட்சம் தமிழர்கள் சிங்கள பயங்கரவாத அரசால் கொல்லப்பட்டிருப்பார்கள். காங்கிரஸ்காரர்களோடு சேர்ந்து "ஒரு கொலையை" மட்டும் வைத்துக்கொண்டு, தமிழர்களை அழிப்பதற்குத் துணை போகாதீர்கள். ஒரே சரக்கை எத்தனை காலத்துக்குத்தான் விற்பனை செய்வது?"

*கே:* தமிழ் ஈழத்தை ஆதரித்த எம்.ஜி.ஆர். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எப்படி ஆத ரித்தார்? முரண்பாடாக இருக்கிறதே?

### ராஜீவ் மிரட்டினார்

"அந்த ஒப்பந்தத்தை எம்.ஜி.ஆர். ஒரு போதும் ஆதரிக்கவில்லை. அப்போது அவர் நோய்வாய்ப்பட்டிருந்த நேரம் என்பதால், "ஒப்பந்தத்துக்கு நீங்கள் ஆதரவு தரா விட்டால் நீங்கள் முதல்வர் பதவியில் இருந்து விலகிக்கொள்ளுங்கள். வேறு ஒருவரைத் தெரிவு செய்யுங்கள்" என்று ராஜீவ் காந்தி நெருக்கடி கொடுத்தார். ஏன்? மிரட்டினார் என்றுகூடச் சொல்லலாம். அந்த நிலையில் வேறு வழியில்லாமல்தான் எம்.ஜி.ஆர். அதை ஆதரித்தார். இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஜூலை 29 ஆம் திகதி கையெழுத்தானது. அதைக் கொண்டாட சென்னையில் ஆகஸ்ட் 2 ஆம் திகதி ஒரு பாராட்டு விழாவை ராஜீவ் ஏற்பாடு செய்திருந்தார்.

அந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டாம் என்று கருதிய எம்.ஜி.ஆர்., ஜூலை 31 ஆம் திகதியே மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா புறப்படத் தயாரானார். அன்று மாலை 5.00 மணியளவில் இராமாபுரம் தோட்டத்திலிருந்து புறப்பட்டு அவர் தாமஸ்மலை வரை வந்தபோது எம்.ஜி.ஆரின் கார் டெல்லியில் இருந்து வந்த உத்தரவால் வழிமறிகப்பட்டது. "அமெரிக்காவுக்குப் போகக் கூடாது. விழாவில் பங்கேற்கவேண்டும்" என அறிவுறுத்தப்பட்டதால் வேறு வழியில்லாமல் அவர் தோட்டத்துக்குத் திரும்பினார். விழாவிலும் கலந்து கொண்டார்.

அந்த விழாவில் ராஜீவ் காந்தியின் கையோடு எம்.ஜி.ஆர். கரம்கோத்துத் தூக்காமல் இருந்த நிலையில் ராஜீவ் காந்தியே அவரது கையைப் பிடித்துத் தூக்கிய காட்சி இன்றும் என் கண்ணில் நிற்கிறது. இந்திய இராணுவத்தால் ஈழப் பெண்கள் கற்பழிக்கப்படுவது பற்றி ராஜீவ் காந்தியிடம் பொன்மனச செம்மல் அழாத குறையாக முறையிட்டார். அதற்கு ராஜீவ் காந்தி கூறிய பதிலை நான் இங்கே கூற விரும்பவில்லை.

*கே:* அதற்காக ராஜீவ் படுகொலையை நியாயப்படுத்தி விட முடியுமா?

"நான் ராஜீவ் கொலையை இரசிக்கவும் இல்லை, அதற்காக மகிழவும் இல்லை. அது நேர்ந்திருக்கக் கூடாத நிகழ்வு. ஒரு துன்பியல் முடிவு. ராஜீவ் மரணத்துக்காக காங்கிரஸ் நண்பர்களுடன் சேர்ந்து நானும் அழத் தயாராக இருக்கிறேன். ஆனால், இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட ஏழாயிரம் தமிழர்களுக்காக நீங்கள் என்னுடன் சேர்ந்து அழத் தயாரா? தமிழர்களின் உயிர் அவ்வளவு மலிவானதா?

### காங்கிரஸ் வெட்கப்பட்டதா?

அண்ணல் காந்தியை மதவெறியன் கோட்சே, அவனது கையில், "இஸ்மாயில்" என்று பச்சை குத்திக்கொண்டு சுட்டுக் கொன்றான். அவன் யார்? ஆர்.எஸ்.எஸ். இயககத்தின் சர்வாதிகாரியான சாவர்க்கரின் சீடன். வாரிசு. அந்த இயக்கத்தின் தத்துப்பிள்ளையாக வந்த பாரதிய ஜனதா, கோட்சேயின் குருவான சாவர்க்கரின் படத்தை நாடாளுமன்றத்தில் திறந்ததே. அதை காங்கிரசால் ஏன் தடுக்க முடியவில்லை? காங்கிரஸ் ஏன் வெட்கப்படவில்லை?

இந்திரா காந்தியைக் கொன்ற பியாந்த் சிங்குக்கு என்ன நடந்தது? இந்திரா நினைவு நாளை காங்கிரஸ் கொண்டாடிய அதே நாளில், குருத்வாரா பிரபந்தக் கமிட்டி பியாந்த சிங் நினைவு நாளை கடைப்பிடித்தது. அவனது இரண்டு பிள்ளைகளை பிரபந்தக் கமிட்டி தத்தெடுத்துக் கொண்டது. இதற்காக காங்கிரசாருக்கு வெட்கப்படவோ, வேதனைப்படவோ தெரியவில்லை. இதைத் தடுக்க அவர்களால முடியவில்லை.

*கே:* ஒரு காலகட்டத்தில் ராஜீவ் காந்தியே புலிகளுடன் சமரசம் செய்ய முன் வந்தார் என்கிறார்களே?

"உண்மைதான் அது. இந்திய இராணுவம் புதைமணலில் காலை விட்டு மாட்டிக கொண்டது என நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர்கள் பேசியதைத் தொடர்ந்து, புலிகளோடு சமரசம் செய்து கொள்ள ராஜீவ் விரும்பினார். ஒருநாள் என் நண்பர் திரைப்பட இயக்குநர் முக்தா சீனிவாசன் அழைப்பை யேற்று மந்தைவெளியில் உள்ள அவரது அலுவலகத்துக்குப் போனேன். புலிகளுடன் ராஜீவ் போர்நிறுத்தம் செய்ய விரும்புகிறார். இதுபற்றி டெல்லியில் ராஜீவ் காந்தியோடு சிதம்பரம் பேசிவிட்டு, எஸ்.ஜி.வினாயகமூர்த்திக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார். நீங்கள் புலிகளுக்கு நெருக்கமானவர் என்பதால் அந்த இயக்கத்தின் சார்பில் நீங்கள் பேச முடியுமா?" என்றார்.

நான் இரண்டு மணிநேரம் அவகாசம் கேட்டு உடனே திருவான்மியூருக்குச் சென்றேன். அங்கே வீட்டுக்காவலில் இருந்த தம்பி கிட்டு, கோலை ஊன்றியபடி வந்து நலம் விசாரித்தார். போர் நிறுத்த கோரிக்கை பற்றி கிட்டுவிடம் கூறினேன். "அண்ணே! உங்களுக்குத் தெரியாதா? இந்தியாவை எந்தக் காலத்திலாவது நாம் எதிர்க்க நினைத்திருப்போமா? இந்தப் போரை நாம் விரும்பியா ஏற்றுக் கொண்டோம்? இது நம்மீது திணிக்கப்பட்ட போர்" என்று வருத்தப் பட்டார்.

"சரி. இயக்கத்தின் சார்பி நான் டெல்லி சென்று சமரசப் பேச்சில் கலந்து கொள்ள முடியுமா?" என்றேன். கிட்டு உடனே உள்ளே சென்று வவுனியாவில் இருந்த தம்பியிடம் (பிரபாகரனிடம்) பேசி அனுமதி பெற்றார். "இலங்கையில் தமிழர் வாழும் வடக்கு. கிழக்கை இணைத்து "தமிழீழத் தாயகம்" என அறிவிக்க வேண்டும். ஈழப்பகுதிகளில் உள்ள இருநூறு சிங்கள இராணுவ முகாம்களை அப்புறப்படுத்த வேண்டும். தமிழர் மறுவாழ்வு நிதியாக நூறு கோடி ரூபா நிதி தரவேண்டும் என்று கோரிக்கைகளை கிட்டு எழுதித் தந்தார். முக்தா சீனிவாசனிடம் போய்ச் சொன்னேன். அவரும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

இரண்டு நாள் கழித்து ஒரு நாள் மாலை டெல்லி புறப்படத் தயாரானேன். அன்று பிரசாத் ஸ்டுடியோவில் பாடல் பதிவை முடித்துக் கொண்டு, பிற்பகல் 2.30 மணிக்கு வீடு வந்தேன். எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. என் மனைவி தமிழரசிக்கு நெஞ்சுவலி ஏற்பட, அவரை உடனே விஜயா மருத்துவ மனையில் சேர்த்து நான்கைந்து நாள்கள் அங்கேயே தங்கியிருந்தேன். ஒத்திவைத்த டெல்லிப் பயணம் இரத்தானது. ஒரு சம்பவம் தவறிப்போனதால் ஒரு சரித்திரமே தவறிப்போனதே என்று வேதனையடைந்தேன்.

இப்படி ஒரு சம்பவம் நடந்ததற்கு முக்தாவே சாட்சி. பழங்காலத்தில் மன்னர்களுக்கிடையே போர் ஏற்படும்போது புலவர்கள் சந்து (சமரசம்) செய்ததுபோல இந்த ஏழைப்புலவனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தும் அது கைநழுவிப்போனது."

*கே:* புலிகளைக் காரணம் காட்டி காங்கிரசார் தி.மு.க. அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கி வருகிறார்களே?

"பாவம். காங்கிரஸ் காரர்களுக்கு நீண்ட காலமாக ஆட்சிப்பசி, அதிகாரப்பசி இருக்கிறது. நாற்பத்தியொரு ஆண்டுகாலமாக தமிழகத்தில் நாட்டாமை செய்யும் வாய்ப்பை இழந்து தவிக்கிறார்கள். இப்போது கூடு விட்டுக் கூடு பாய (கூட்டணி மாற)த் துடிக்கிறார்கள். அதற்கு ஏதாவது காரணம் வேண்டுமே? அந்த வகையில் விடுதலைப் புலிகள் அவர்களுக்கு உதவி இருக்கிறார்கள். காங்கிரஸ் நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள். பயங்கரவாதம் பற்றிப் பேசுகிற பாசமிகு தோழர்களே! நீங்கள் சத்தியமூர்த்தி பவனை யுத்த பூமியாக்காமல் பார்த்துக் கொண்டால் போதும்."

இவ்வாறு புலவர் புலமைப் பித்தன் கூறினார். *

# பங்களாதேஷ் புலமைப்பரிசிலுக்கு 14 யாழ். மாணவர்கள் தெரிவாகின்ர்

## சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணை

யாழ்ப்பாணம், பெப்.13

சேவாலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் பங்களாதேஷ் நாட்டின் சிற்றா கொங் நகரத்தில் உள்ள மகளிருக்கான ஆசிய பல்கலைக்கழகம் யாழ். குடாநாட்டில் இருந்து விண்ணப்பித்தவர்களுள் பதின் நான்கு (14) மாணவிகளை அந்தப் பல் கலைக்கழக அனுமதிக்கு தேர்தெடுத்துள்ளது. இவர்களுக்கான அனுமதி புலமைப் பரிசில் அடிப்படையிலானதாகும்.

யாழ். மாவட்ட சேவா லங்கா நிறு வனத்தின் ஏற்பாட்டுக்கு இணங்க அந்த நிறுவனத்தின் ஊடாக அனுமதிக்கு விண்ணப்பித்த 185 பேர்களில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் திட்ட முகாமையாளர் க. சபேசன் உதயனுக்கு தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஆறு வருடகாலத்திற்கும் ஒவ்வொரு மாணவிக்கும் தலா 60 ஆயிரம் அமெரிக்க டொலர் புலமைப்பரிசில் வழங்கப்படும். மூன்று வருட பட்டப்படிப்பினைத் தொடர்ந்த மேலும் இரண்டு வருட முதுமாணி தொழிற் கல்வியும் வழங்கப்படும் என்று சபேசன் மேலும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

### ஒன்றைத் தெரிவு செய்யலாம்

முகாமைத்துவம், தகவல் தொழில் நுட்பம், சூழல் பொறியியல், பொதுக் கொள்கை, கல்வி (Education) என்பவற்றில் இருந்து ஒன்றை இவர்கள் தெரிவு செய்ய முடியும். இவற்றுக்கு முன்பதாக ஆரம்ப உதவிக் கல்வி மார்ச் 2008 இல் தொடங்கி செப்ரெம்பர் 2008 இல் முடிவடையும். ஆங்கிலக் கல்வி, பகுப்பாய்வு கணனி என்பன இக் காலத்தில் கற்பிக்கப்படும்.

### ஆங்கில மொழிமூலம்

கல்வியாண்டு காலங்களில் உணவு, வதிவிட வசதி உட்பட தேவையான வசதிகள் போதியளவு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. 2,500 மாணவர்கள் கற்பதற்கான வள ஆள் அணியினர் உண்டு. மாணவர்கள் தெற்கு, தென் கிழக்காசியாவில் இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுள் வங்காள தேசம் செல்ல உள்ளவர்களின் விவரம்:-

கைலயங்கரி செல்வம் மகிழினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இலக்கியா சிதம்பரநாதன் (உடுப்பிட்டி மகளிர்), உசிதா சிதம்பரநாதன் (நெல்லியடி ம.ம.வி), கம்சிகா கருணராசா (நெல்லியடி ம.ம.வி), உமையாள் உமாகாந்தன் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கணவதிப்பிள்ளை கீர்த்தனா (வேம்படி மகளிர்), பொன்னம்பலம் சுதாயினி (வேம்படி மகளிர்), தங்கராசா தமிழ்ச் செல்வி (பருத்தித்துறை வட. இந்து), சிந்துகா விவேகானந்தன் (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி). தெரிவு செய்யப்பட்டவர்களுள் ஐந்து மாணவியர் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளதால் யாழ்ப்பாணத்திற்கு கிடைக்க இருந்த ஐந்து இடங்கள் வீணாகிவிட்டதாக சபேசன் கவலை தெரிவித்தார்.

(ப-302)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில்
உயர்கல்வியை தொடர ஒரு அரிய வாய்ப்பு.
Russia, Belarus, Poland, Ukraine, Krygyztan, Latvia Germany, France போன்ற நாடுகளில் உயர்கல்வி கற்பதற்கு அனுமதி மற்றும் விசா பெற்றுத்தரப்படும்.

மலேசியாவில்
குடியேற, தொழில் தொடங்க, Work permit, பல்கலைக்கழக அனுமதி மற்றும் student visa பெற்றுத்தரப்படும்.
மலேசியாவில் குடியேற 10 வருட மீளப்புதுப்பிக்க கூடிய விசா பெற்றுத்தரப்படும்.
வீடுகள் காணிகள் வாங்கலாம்.
வங்கிக்கடன் வசதி
Duty Free வாகனம்
மேலும் பல நன்மைகள்............

UK/Canada வில்
பல்கலைக்கழக அனுமதி Student Visa, Migration, Settlement Visa, Working Holiday Maker (UK), Work Permit, Tourist Visa பெற்றுத்தரப்படும்.

Visa Appeal
விசா மறுக்கப்பட்டதா? கவலையை விடுங்கள்
Visa மறுக்கப்பட்டவர்களுக்கு Appeal மூலமாகவோ அல்லது Re-Application மூலமாகவோ விசா பெற்றுத்தரப்படும்.

குறிப்பு:-
இதுவே எமது நிறுவனத்தின் வெற்றி எனவே Visa மற்றும் Appeal

PARANAN ASSOCIATES (PTE) LTD
NO-403, 1/1, Galle Road, Colombo-06. Tel: 2551241, 2551641
Fax:2507932, Mobile: 0777 370 202, e-mail:parananassociates@gmail.com
Your Success Is Our Success

Passport, O/L, A/L இலங்கை அரசாங்க கல்வித்திணைக்கள சான்றிதழ்களை ...
யாழ்-கொழும்பு வருவதற்கான ஏற்பாடுகள். கொழும்பு வந்தவுடன் உடனடி வெளிநாட்டு பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்... நிகழ்வுகள்...




பொது சுகாதாரப் பரிசோதகர் ஜெ.உமாசுதன் எழுதிய கவிதை நூல் வெளியீட்டு விழா மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட காசநோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர். சி.யமுனானந்தா நூலின் முதல் பிரதியைச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பழைக் கல்விக்கோட்டப் பணிப்பாளர் ச.கைலாச நாதனிடம் வழங்குவதையும் நூலாசிரியர் ஜெ.உமாசுதன் நிற்பதையும் படத்தில் காணலாம். (135)




தெணியானின் 'இன்னொரு புதிய கோணம்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நூலாசிரியர் தெணியான் பதிலுரை நிகழ்த்துவதையும் கோப்பாய் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அதிபர் எஸ்.லலிசன், யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி ரீ.கலாமணி, விழாத்தலைவர் ஆர்.செல்வராஜா, மதிப்பீட்டுரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவல் பேராசிரியர் எஸ்.சிவலிங் கராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (218)




அச்சுவேலி லயன்ஸ் கழகமும் உரும்பிராய் லயன்ஸ் கழகமும் இணைந்து நீர்வேலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் வயோதிபர் ஒருவருக்குப் பிரபல மூக்குக் கண்ணாடி பொருத்துநர் பெர்ணான்டோ மூக்குக் கண்ணாடி அணிவிப்பதைப் படத்தில் காணலாம்

அச்சுவேலி லயன்ஸ் கழகத்தின் தலைவர் ஏ.அருந்தவநேசன் மற்றும் கழக உறுப் பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (11)



யாழ்.நகர்மைய றோட்டரக்ட் கழகத்தால் அண்மையில் நடன ஆர்வலர்களுக்குப் பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

இதில் பங்கு பற்றிச் சான்றிதழ்கள் பெற்ற தரப் போட்டியாளர்கள், பாடசாலை மாண வர்கள், நடன ஆர்வலர்களைப் படத்தில் காணலாம். (203)



யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் மூன்றுமாத கால தொழில்நுட்பப் பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சான்றிதழ் பெற்றவர்களையும் விருந் தினர்களையும் படத்தில் காணலாம். (57)

# வடிசாராயம் விற்பனை செய்த இருவருக்கு ஒரு லட்சத்து 40ஆயிரம் ரூபா அபராதம்

யாழப்பாணம்,பெப்.13

வடிசாராய விற்பனையில் ஈடுபட்ட இருவருக்குப் பருத்தித்துறை நீதிமன்றம் ஒரு லட்சத்து 40ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளதுடன் மூன்று மாதம் நன்னடத்தைப் பிரிவில் இருக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை மதுவரிப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது அல்வாயைச் சேர்ந்தவர்களான சிவலிங்கம் இன்பராஜ் 14 லீற்றர் வடி சாராயத்துடனும், அருணகிரிநாதன் சிவ குமார் 4 லீற்றர் வடிசாராயத்துடனும் பிடிபட்டனர்.

இவர்கள் இருவரையும் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கே.அரியநாயகம் முன்னி லையில் ஆஜர் செய்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதி வான், சம்பந்தப்பட்டவர்கள் குற்றத்தை ஒப் புக்கொண்டதை அடுத்து இன்பராஜீற்கு ஒரு லட்சம் ரூபாவும் சிவகுமாரனுக்கு 40 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித் துள்ளார்.

அத்துடன் சான்றுப் பொருளான வடி சாராயத்தை அழிக்குமாறும் உத்தரவிட்டார். (203-218)

## கீரிமலை கமநல சேவை நிலையத்தில் மரக்கறி விதைகள் கையிருப்பில் உள்ளன

மாகியப்பிட்டியில் இயங்கிவரும் கீரி மலை கமநல சேவை நிலையத்தில் மரக் கறி விதைகள் கையிருப்பில் உள்ளதாக வும் இப்பிரதேச விவசாயிகள் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

டுபாய் பூசனி, கறி மிளகாய், கோவா, பீற்றூட் மற்றும் பயிற்றை விதைகள் தற் போது இங்கு கையிருப்பில் உள்ளன.

இதேவேளை-சிறு தானியச் செய்கைக்கு தேவையான எள், பயறு, கௌபி மற்றும் சணல் விதைகளுக்கு இங்குதட்டுப்பாடு நிலவிவருகின்றது என்றும் கூறப்பட்டது.

யூரியா உரம், பொட்டாஸ் உரம் மற்றும் கிருமி நாசினி வகைகளும் இந்த நிலையத் தில் உள்ளன என்று கூறப்பட்டது.(203-135)

# இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்

இன்று எனது வாழ்வில் நான் என் ஆண்டவரிடம் எதை எதிர்பார்க்கின்றேன்? நான் மனிதனாய் பிறந்ததன் முழுப்பயனை அடைய இறை விசுவாச வாழ்வையா? அல்லது புதுமைகளையா? எனது அன்றாட வாழ்வு இறை நம்பிக்கையில், விசுவாசத்தில் கட்டி எழுப்பப் படல் வேண்டும். ''விசுவாசத்தை'' என்னுள் என்றென்றும் அதிகரிக்கும்படியாக இறை ஆவியானவரை நான் அழைத்துச் செபிக்கவேண்டும். நான் யாராக இருக்கின்றேனோ, அவை அனைத்தும் எனக்காக இறைவன் தந்த அளவிட முடியாத அவர் அன்பின் அடையாளங்களே. ஆண்டவர் இயேசு, வாழும் கடவுள். இரக்கமும் கருணையுமே நமக்குக் காட்டும் அரும்பெரும் அடையாளங்கள். ஆண்ட்வர் இயேசுவின் வெளிப்பாடு, எல்லா புதுமைகளுக்கும் மேலாகச் சென்று நான் ஆண்டவரை இறுக்கப் பற்றிக் கொள்ள அழைப்பு விடுக்கின்றது.




இன்று எங்கு பார்த்தாலும் எம் விசுவாச வாழ்வு சோதனைக்குட்பத்தப்படுவதையே பார்க்கின்றோம். நாம் இயேசுவின் அன்பிற்காய் அவரை பின்பற்றினால், எதையும் சந்திக்கும் ஏன் தாங்கும் இதயபலம் நமக்குள் அதிகரிக்கும். புறத்தன்மைகளில் எதிர்பார்க்கப்படும் புதுமைகள் அல்ல நம்மை விடுவிப்பது. ஆண்டவரின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் உண்மை நமக்குத் தரும் உன்னத பாவ மன்னிப்பு. மீட்பு எனும் பெரும் புதுமையே நம் வாழ்வின் அச்சாரம்.

இறை இயேசுவின் அன்பின் ஆசீர் எம் அன்றாட வாழ்வை நிரப்பிக்கொண்டே இருக்கின்றது. நன்றியோடு மீட்டுப்பார்ப்போம்.

இறைவன் எனக்குத் தந்த சிறப்பான ஒவ்வோர் ஆசீர்வாதங்களையும் மிகக் கவனத் தோடு மீட்டுப் பார்த்து நன்றி கூறவிளைவோம்.

- அருட்திரு. மொன்போர் CMF.

# வாசகர் திருமுகம்

## இதை யார் கவனிப்பது? வைத்தியசாலை நிர்வாகமா? மாநகர சபை அதிகாரிகளா?

யாழ்.போதனா வைத்தியசாலை நடைபாதை முழுவதையும் நடைபாதை வியாபாரிகள் ஆக்கிரமித்துள்ளனர். இதனால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் வீதியாலேயே செல்லவேண்டிய அவலநிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். சிகிச்சை முடிந்து வீடு செல்லும் நோயாளர்கள் கையில் தலையணையுடனும் சிலர் 'கதீற்றர்' பையுடனும் ஆஸ்பத்திரி வீதியால் நடந்து செல்வது சர்வ சாதாரணக் காட்சி.

மருத்துவமனை நடைபாதையை ஆக்கிரமித்துள்ள நடைபாதை வியாபாரிகளை அப்புறப்படுத்த யாழ்.மாநகர சபை நிர்வாகத்தினாலோ மருத்துவமனை நிர்வாகத்தினாலோ முடியாதா? அல்லது நடைபாதை வியாபாரிகளிடமிருந்து வாடகை, குத்தகை போன்ற ஏதாவது அறவிடப்படுகிறதா?

அடுத்ததாக யாழ்.நகரப் பகுதியில் நத்தை வேகத்தில் செல்லும் மினிபஸ்களாலும் ஏனைய வாகனச் சாரதிகளும் மிதிவண்டி ஓட்டுநர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். குறிப்பாக ஆஸ்பத்திரிவீதியில் வேகக்கட்டுப்பாட்டு அறிவித்தல் பலகைகள் எங்கும் காணப்படுகின்றன. இதேபோல் யாழ்.நகரப் பகுதியில் ஆகக் குறைந்த வேகம் என்று அறிவித்து அதைக் கண்காணிப்பதற்குப் போக்குவரத்துப் பொலிஸாரை நியமித்தால்தான் யாழ்ப்பாண மினிபஸ் சாரதிகளைத் திருத்தலாம் போலிருக்கிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நாய்கள் மலம் கழித்திருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. அதி உத்தம ஜனாதிபதி கட்டாக்காலி நாய்களைக் கொல்லக்கூடாது என்று சொன்னதை மாநகர சபை நிர்வாகமும் மருத்துவமனை நிர்வாகமும் செயற்படுத்துகின்றனவா என்றே சிந்திக்க வேண்டியுள்ளது. உரியவர்களுக்குச் சமர்ப்பணம்.

திருநெல்வேலி. ந.விக்கினேஸ்வரன்.

## பற்றைக் காடுகளை அகற்றி இடையூறுகளை நீக்குவார்களா?

நல்லூர், கோப்பாய் பிரதேச சபை பிரிவில் - நீண்ட பல வருடகாலமாக - தேடுவாரற்ற நிலையில் - பல காணிகள் பற்றைக் காடாக இருப்பதால் சுகாதாரத்துக்கு மட்டுமல்லாது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றது.

இக் காணிகள் இன்றைக்கு 40 - 50 வருடங்களுக்கு மேலாகவே தேடுவாரற்ற நிலையில் இருப்பது பிரதேச சபையின் அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருப்பதற்கு நியாயமில்லை.

குறிப்பிட்ட காணிகள் அனைத்தும் இப் பகுதியில் உள்ள வசதிபடைத்தவர்களின் மேலதிகமான காணிகளே. இப் பற்றைக் காடுகளால் அயலில் குடியிருப்பவர்கள் அடிக்கடி இடைஞ்சல்களுக்கு ஆளாகிவருகின்றனர். பற்றைகளை வெட்டுமாறு சீருடையினரால் அடிக்கடி அறிவுறுத்தப்படுகின்றார்கள். அத்துடன் சுற்றாடல் மாசுபடுவதாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆனால் இக் காணிகளின், உரிமையாளர் நாங்கள் தான் என்று சொல்லிக் கொள்ளும் அந்த வசதி படைத்தோர் இதில் அக்கறை காட்டி, பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்ய முன்வருகிறார்களில்லை. அதனால் பிரதேச சபை [illegible] சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து விரைவாக நடவடிக்கைகள் எடுத்து அயலவரின் துயரத்தைப் போக்க முன்வரவேண்டும்.

கலவியங்காடு, நல்லூர். எம்.புரட்சிகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



விமான நிலையக் கட்டட முன்னாள் மேற்பார்வையாளரும், உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய தொண்டர்சபை அமைப்பாளரும், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பழைய மாணவரும், மேற்படி வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்க முன்னாள் உபதலைவர் அமரர் க.சிவஞானத்தின் சிரேஷ்ட புத்திரனுமான


## சிவஞானம் சிவகுமாரன்

நோர்வேயில் காலமானதையிட்டு அதிர்ச்சியடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய அருளுமாறு உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் பாதம் பணிகின்றோம்.

யா/சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய். (71105)

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் முன்னாள் உதைபந்தாட்ட விரரும், முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரியும், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரியும், புகழ்பூத்த சகலதுறை விளையாட்டு விருமான அன்புக்கும் மதிப்புக்குமுரிய

அமரர்

## இ.ரோகான் இராஜசிங்கம்

அவர்கள் காலமாகிய செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பன்னாலை, தெல்லிப்பழை. (71109)

கணேசன் வி.க.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 ★ 10 ★ 1942



மறைவு 14 ★ 01 ★ 2008

## அமரர் சோமு திரவியசிங்கம்

அன்னாரின் பிரிவால் நாம் துயருற்றிருந்தவேளை எமக்கு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.02.2008) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

நவாலி வடக்கு, மானிப்பாய். (71107)

குடும்பத்தினர்.

# கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் PRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 15.02.2008 விநியோகிக்கப் படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.13

நல்லூர், ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள வாலையம்மன் ஆலயத் திருவிழா நேற்று முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும். (203)

★ ★ ★

நாவலி,பெப்.13

சுதுமலை முருகமூர்த்தி ஆலய பெருந் திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 19ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 20ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-100)

# கவிதைக் கலசம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.13

நா.புவனசுந்தரம் எழுதிய 'கவிதைக் கலசம்' என்னும் நூல் வட்டுக்கோட்டை தமிழ் இலக்கிய மன்றத்தினரால் அண்மையில் வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

அ.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பண்டிதர், புலவர்மணி க.மயில்வாகனனார், வலிகாமம் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் இ.ஜீவகாருண்யம் நிகழ்த்த முதற்பிரதியை சமூக சேவையாளர் செ.இராசலிங்கம் பெற்றுக்கொண்டார்.

நயப்புரையை பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் ஆற்றினார்.

நிகழ்வில் நூலாசிரியருக்கு வட்டுக்கோட்டை தமிழ் இலக்கிய மன்றத்தால் 'சந்தகவி' என்னும் விருது வழங்கப்பட்டது. (203)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு

வலி.தென்மேற்கு,பெப்.13

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவு கடந்த தைப்பூச தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளர் டாக்டர்.ஆ. கேதீஸ்வரன் இந்த அவசர சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைத்தார்.

இதேவேளை- சேதமடைந்த நிலையிலுள்ள கட்டடமொன்றை புனரமைப்பு செய்வதற்காக டாக்டர் ஆ.கேதீஸ்வரனால் அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட நிதி உதவியிலிருந்து 16 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (203-135)

# இலவச கண்பரிசோதனையும் பற்சுகாதார ஆலோசனையும்

சண்டிலிப்பாய் மேற்கு, மத்தி விவசாய சம்மேளன அனுசரணையுடன்

இலவச கண்பரிசோதனையும் பற்சுகாதார ஆலோசனையும் வழங்கப்பட்டு, அதன் பிரகாரம்

1. ரூ.600இற்கு பிறேமிலான கண்ணாடிகளும்
2. பல் கட்டுதல், கிளிப்போடுதல் என்பன அரைக்கட்டணத்திலும் மேற்கொள்ளப்படும்.

காலம்: 17.02.2008 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மு.ப. 9 - பி.ப. 2

இடம்: மணிமேகன் முன்பள்ளி, சீரணி, சண்டிலிப்பாய். (71111)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## சின்னத்தம்பி அம்பிகாநிதி

(பாட்டு மாமா)

அன்னை மடியில்: 07★09★1956

இறைவனடியில்: 14★01★2008



13.02.2008

உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான.

அன்பின் சிகரமே! பாசத்தின் உறைவிடமே!
தூர தேசம் சென்று திரும்பி வருவாயென
உறவுகள் காத்திருக்க நோய் வந்து
உனை நிரந்தரமாகப் பிரித்ததுவோ!

ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

அன்பான சகோதரி: சிவகாம்பிகை மல்லிகா. (71108)

# கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தில் பலமுறை தலைவராக இருந்தவரும் எமது கழக முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவருமான இளைப்பாறிய தபால் அதிபர்

## சுப்பிரமணியம் பாலசுந்தரம்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது கழகம் பெரும் கவலை அடைகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(71106)

அரியாலை ஐக்கிய கழகம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்

திருமதி மகாலட்சுமி ஜெயக்குமாரின் அன்புத் தாய்

## திருமதி திருப்பதி சண்முகநாதன்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள்.

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை. (சி/551440)


# COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna  Branch : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science 5 Months ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing 4 Months ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Desining 4 Months ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing 4 Months ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering 3 Months ~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD 3 Months ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office 3 Months 1,500 | Accounting Package 3 Months ~~10,750~~ 2,150 |

50% Off ADVANCE COURSES

Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :15/02/2008 2PM
Batch II :16/02/2008 1PM
Batch III :17/02/2008
Batch IV :20/02/2008


# ஏல விற்பனை அறிவித்தல்

## தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி கிளையில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி கிளையில் 31.01.2007 வரையான காலப்பகுதிக்குள் அடகுவைத்து 31.01.2008 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏல விற்பனைத் திகதி: 01.03.2008

ஏல விற்பனை நடைபெறும் இடம்: தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி கிளை

இல.141, V.M.K. கட்டடம், சாவகச்சேரி.

T.P.: 021 222 4033

ஏல விற்பனையை இரத்துச் செய்யும்/ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது

உதவிப் பொதுமுகாமையாளர் (கடன்)
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமையகம், கொழும்பு-03

NSB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# முதல் 'அடி'யும் முதல் 'காலடி'யும்

நாடு பற்றி எரியும் போது பிடில் வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தானாம் நீரோ மன்னன்.

அதுபோலவே படுகின்றது இலங்கை தொடர்பான புதுடில்லியின் செயற்பாடும்.

இலங்கையில் யுத்தம் தீவிரமடைந்து, மக்களின் பாதுகாப்புக் கேள்விக்குறியாகி, பேரவல நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகள் தமது பிரஜைகளை இலங்கையில் பயணிப்பதைத் தவிர்க்கும்படி பயண எச்சரிக்கையை விடுத்திருக்கின்றன. எங்கும், எந்நேரமும், எதுவும் நடக்கலாம் என்ற அச்ச சூழல் இலங்கையில் நிலவுகின்றது என்ற யதார்த்தப் புறச்சூழலை அந்தந்த நாடுகள் உணர்ந்து கொண்டதன் விளைவாகவே இந்த எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், அருகில் இருக்கும் நமது அயல் வல்லாதிக்க நாடான இந்தியா மட்டும் இது குறித்தெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் வழமைநிலை இங்கு நிலவுவதுபோல மிகத் தாராளமாக நடந்துகொள்கின்றது.

இலங்கையில் பயணிப்பது குறித்துக் கூட கவனமாக இருங்கள் என்று மேற்கு நாடுகள் தனது பிரஜைகளுக்கு எச்சரிக்க -

இந்தியாவோ இவற்றுக்கு மத்தியில் தனது வர்த்தக முதலீட்டாளர்களை இங்கு கூட்டிவந்து இங்கு முதலீடு செய்வது குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கின்றது.

நெருக்கடி நிலைமை முற்றி, இலங்கையில் முழு அளவில் போர் வெடித்து, அதன் தீவிரம் தென்பகுதியிலும் மோசமான அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடிய பேராபத்துச் சூழல் நெருங்கி வருகையில் -

இந்தியா, மேலும் இருநூறு கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடுகளை இலங்கையில் கொண்டு வந்து கொட்டுவது குறித்து சிந்திக்கின்றது.

இதுபற்றிய பேச்சுக்களை நடத்தத் தனது வர்த்தக அமைச்சர் ஜெய்ராம் ரமேஷை வேறு கொழும்புக்கு அனுப்பி வைத்திருக்கிறது பாரதம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் எண்ணத்தை முழுதாகத் துறந்து, இராணுவ வழித் தீர்வுக்காகப் போர்வெறிகொண்டு, யுத்தத் தீவிரத்தில் கொழும்பு செயற்படுகின்றது என்பது அப்பட்டமாக - வெளிப்படையாக - தோற்றுகின்றது.

அந்தப் போர்வெறித் தீவிரத்தை சர்வதேச கண்களுக்கு மறைப்பதற்காக அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் என்ற கயிறையும் கொழும்பு அரசு அவிழ்த்துவிட்டுள்ளது என்பதும் வெளிப்படை.

ஆனால், அந்தச் சூதுவாது ஏதும் புரியாமல், இலங்கை அரசின் அந்த நடவடிக்கையை விழுந்தடித்துக்கொண்டு 'வரவேற்கத்தக்க முதல் காலடி' என்று பாராட்டியது இந்தியா.

ஆனால் அந்த மெச்சுதல் கிடைத்து சில தினங்களிலேயே அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது மட்டுமே - அது மாத்திரமே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது ஒரே நடவடிக்கை என்பதை நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றிய சுதந்திரதின உரையில் தெளிவாகவும், உறுதியாகவும், பகிரங்கமாகவும் அறிவித்ததன் மூலம், அந்தச் செயற்பாடே தீர்வுக்கான தமது முதல் காலடியும், இறுதிக் காலடியும் கூட என்று தெளிவுபடுத்தினார் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான தமிழர்களுடன் - அவர்களின் பிரதிநிதிகளுடன் - பேச்சு நடத்தாமல் -

தென்னிலங்கையில் தமது அரசுக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளை மட்டும் தனது முடிவுக்கு தலையசைக்கச் செய்துவிட்டு -

இருபது வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்டு, சட்டமாக்கப்பட்டும், நடைமுறைச் சாத்தியப்படாமல் கிடப்பில் தூக்கிப்போடப்பட்ட அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தைத் தூக்கிப் பிடித்து -

அதுவே, இலங்கை இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு என்று 'தத்துவம் பிளந்து' அதை நடைமுறைப்படுத்தப் போகின்றவர் போல நடிப்புக் காட்டுகிறார் அரசுத் தலைவர்.

அதைக்கூட முழு அளவில் நடைமுறைப்படுத்தும் திடசங்கற்பமும், உறுதியும், மன எண்ணமும் அவருக்குக் கிடையவே கிடையாது என்பதும் தெரிந்த சங்கதிதான்.

அந்த வகையில் பார்த்தால், உண்மையான - இதய சுத்தியுடன் அணுகப்படுகின்ற அமைதி முயற்சிகளுக்கு விழுந்த 'முதல் அடி' (First Blow), இந்த அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் என்ற எத்தன நாடகம். அதையே 'முதல் காலடி' (First Step) என்று புரியாமல் சிலாகித்திருக்கிறது இந்தியா.

இந்தப் புரியாத போக்கின் தொடர் செயற்பாடுதான், இலங்கை இக்கட்டில் சிக்கியிருக்கும் இந்த, இன்றைய நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சரியான பாதையில் கொழும்பை வழி நடத்துவதை விடுத்து, கொழும்பின் தவறான போக்கை ஏற்று, அங்கீகரித்து, ஊக்குவிப்பது போல இங்கு வர்த்தக முதலீட்டில் அதிக ஆர்வம் காட்டும் செயற்பாட்டை இச்சமயத்தில் - இந்தச் சந்தர்ப்பத்தில் - மேற்கொள்வதுமாகும்.

# தமிழகம் ஆயுதக் காடாக மாறும் அபாயம்

## எச்சரிக்கிறார் ஜெயலலிதா



சென்னை,பெப்.13

தீவிரவாத அமைப்புகளுக்கு முதல்வர் கருணாநிதி ஆதரவு தருவதாகக் கூறியுள்ள அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா, தமிழகம் ஆயுதக் காடாக மாறிவிடும் என்று எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியவை வருமாறு:-

கருணாநிதிஆட்சியில் காவல்துறையினர் பரிதாபகரமானநிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். விடுதலைப் புலிகள், நக்சலைட்டுகள், மாவோயிஸ்ட்கள் என பல்வேறு தீவிரவாத மற்றும் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் ஊடுருவல் காரணமாக தமிழக மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

காவல் நிலையத்தையே பாதுகாக்க முடியாத கருணாநிதி, தமிழ்நாட்டு மக்களை எப்படி காப்பாற்றப்போகிறார்? கருணாநிதிக்கு இந்த நாட்டின் மீதோ, அரசமைப்புச் சட்டத்தின் மீதோ, இந்திய இறையாண்மையின் மீதோ அக்கறை இல்லை.

காவல்துறையை கைவசம் வைத்திருக்கும் முதல்வர் கருணாநிதியே தீவிரவாதிகளை ஆதரித்துப் பேசும்போது, நாம் ஏன் நக்சலைட் கும்பலை எதிர்த்துப் போராடி காயம் அடைவதோடு, முதல்வரிடம் கெட்ட பெயர் வாங்க வேண்டும் என்று அதியமான் கோட்டை காவல் நிலைய அதிகாரிகள் நினைத்துவிட்டனர் போலும். வெள்ளித்திருப்பூர் சம்பவத்தில் காவல்துறையினர் எதிர்த் தாக்குதல் நடத்தினர். ஆனால், தற்போது நடை பெற்ற சம்பவத்தில் காவல் துறையால் எதிர்த்தாக்குதல் நடத்தப்படவில்லை.

கருணாநிதியின் கடந்தகால ஆட்சியைவிட தற்போதுள்ள ஆட்சியில் 'முன்னேற்றம்' ஏற்பட்டுள்ளது. தீவிரவாத அமைப்புகளுக்கு கருணாநிதி தொடர்ந்து ஆதரவு கொடுப்பதால் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் வேண்டுமானால் தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் இருக்காது.

ஆனால், தமிழகம் ஆயுதக்காடாக மாறிவிடும் என்பதை கருணாநிதிக்கு நான் எச்சரிக்க விரும்புகிறேன். இந்தியாவிலேயே பயங்கரவாத அமைப்புகளின் ஊடுருவலில் முதன்மை மாநிலம் என்ற பெருமையைத் தமிழகத்திற்குக் கருணாநிதி தேடித்தரும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

தமிழகத்தை ஆயுதக்காடாக மாற்றி வரும் கருணாநிதியின் செயற்பாடுகளைக் கண்டிப்பதோடு, தமிழக மக்களை தீவிரவாத அமைப்புகளிடமிருந்து காப்பாற்றவும், தமிழகத்தில் தொடர்ந்து பெருகி வரும் வன்முறைக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், தமிழ்நாட்டில் குடியரசுத்தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்த உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பது தவறில்லை

## திருமாவளவன் கருத்து

மதுரை,பெப்.13

தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதில் தவறில்லை என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல். திருமாவளவன் கூறினார். மதுரை அவனியாபுரத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற திருமண விழாவில் பேசியவை வருமாறு:-

தற்போதைய இளைஞர்கள் பதவி, பரிசுகளுக்காக புதிய கட்சிகளை நாடிச் செல்கின்றனர். பெட்டிக் கடைகள், தேநீர்க் கடைகள் போல் தற்போது புதிய கட்சிகள் தொடங்கப்படுகின்றன.

இலங்கையில் தாக்குதலுக்குள்ளாகி வரும் தமிழர்களுக்காக, சென்னையில் நடைபெற்ற கருத்துரிமை மாநாட்டின் மூலம் அவர்களுக்கு ஆதரவாகப் பேசியது தவறில்லை. சட்டம், சிறை என எங்களைப் பயமுறுத்தமுடியாது. ஈழத் தமிழர்களுக்காக நாங்கள் எழுப்பிவரும் ஆதரவுக் குரலை ஒருபோதும் தடுக்கமுடியாது. கருத்துரிமைக் காகப் போராடும் எங்களுக்குச் சிறைதான் முடிவென்றால் தாராளமாக அதை ஏற்றுக்கொள்வோம் எனக் கூறினார்.

# தமிழ் புத்தாண்டு அறிவிப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

தை முதலாம் திகதி தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்து தமிழக அரசு சட்டம் நிறைவேற்றியதை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த டிராபிக் ராமசாமி என்பவர் பொதுநலன் கருதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பவை வருமாறு:-

சித்திரை முதலாம் திகதிக்குப் பதில், தை முதலாம் திகதி தமிழ்ப் புத்தாண்டாக கடைப் பிடிக்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்தது. இந்த அறிவிப்பை வெளியிட்ட உடனேயே நான் ஆணையாளருக்கு மனு அளித்தேன். இதற்கு ஒப்புதல் வழங்கக் கூடாது என்று அதில் தெரிவித்தேன். இதன் பின்னர், கடந்த சட்டசபை கூட்டத்தொடரில் கடந்த மாதம் 29ஆம் திகதி, தை முதல் நாளை, தமிழ்ப் புத்தாண்டாக அமுலுக்கு கொண்டு வரும் வகையில் சட்டம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டம் நிறைவேற்றியது துரதிஷ்டவசமானது. அரசியல் சட்டத்திற்கு எதிரானது. இந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் ஒருதலைப் பட்சமாக இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டத்தை நிறைவேற்றும் முன்பு பொதுமக்களிடையே கருத்து கேட்கப்படவில்லை.

பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்ததை திடீரென்று மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இதனால் யாருக்கும் எந்த பயனும் இல்லை. இந்த சட்டத்தை அமுல் படுத்தக் கூடாது என்று உத்தரவிட வேண்டும். தமிழை ஊக்குவிப்பதில் அரசு ஆர்வம் காட்டினால் திருவள்ளுவர் ஆண்டு இருப்பதைப் போல, பல அறிஞர்கள் பெயரில் புதிய ஆண்டுகளை தொடங்கலாம். ஆனால், சித்திரை முதல் நாளுக்கு பதில், தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக மாற்றியது தவறு. ஆகவே, இதற்காக கொண்டு வந்த சட்டத்தை அமுல்படுத்தக்கூடாது - இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# புலிகளுக்கு வெடிகுண்டு கடத்தியவர் கைது

இராமநாதபுரம்,பெப்.13

விடுதலைப்புலிகளுக்கு வெடிகுண்டுகள் கடத்த முயன்றவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதுக்கோட்டையில் இருந்து 'மர்ம நபர்' வெடிபொருள்களை வாங்கி விடுதலைப்புலிகளுக்கு கடத்துவதாகக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து இடம்பெற்ற விசாரணையில், தொண்டியருகே புதுக்குடியில் உள்ள வீட்டில் வாலிபர் வெடிகுண்டு பதுக்கி வைத்திருப்பது தெரிய வந்தது.

இதனையடுத்து, இவரது வீட்டைப் பொலிஸார் சோதனையிட்டபோது, பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 டெட்டனேட்டர்கள், 83 ஜெலட்டின் வெடிகுண்டுக் குச்சிகள், 10 மீற்றர் வயர் என்பன பறிமுதல் செய்யப்பட்டன. கார்மேகம் (வயது35) என்ற இந்த நபரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். அவரை விசாரித்த போது பல பரபரப்புத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக் கோரிப் பேரணி

## கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவிப்பு

சென்னை,பெப்.13

சேது சமுத்திரத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றக்கோரி தூத்துக்குடியில் பேரணி மற்றும் பொதுக் கூட்டம் நடத்தப்படும் என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் தெரிவித்துள்ளன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் என். வரதராஜன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-

தமிழ்நாட்டு மக்களின் ஒன்றரை நூற்றாண்டுகால கனவான சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கான பணிகள் கிட்டத்தட்ட 60 சதவீதம் முடிவடைந்துள்ள நிலையில், இத்திட்டத்தை நிறைவேற்றி முடிக்க கடமைப்பட்டுள்ள இன்றைய மத்திய அரசு, இதில் ஊசலாட்டமான நிலைப்பாட்டை எடுத்திருப்பது கவலையும், அதிர்ச்சியும் தருவதாக அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கான அனைத்து மட்ட ஆய்வுகளையும் மேற்கொண்டதோடு, இந்த திட்டத்திற்கான ஒப்புதலையும் கடந்தகால பா.ஜ.க.தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியே வழங்கியிருந்தது. திட்டப் பணிகளும் அப்போதே தொடங்கப்பட்டது.

2004 இல் ஆட்சியைப் பொறுப்பேற்ற இன்றைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இந்த திட்டத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்கி அமுலாக்கத்தைத் துரிதப்படுத்த முற்பட்டது.

ஆனால், குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காக பா.ஜ.கவும், ஆர்.எஸ்.எஸ்.சும் ராமர்பாலம் என்ற பிரச்சினையை எழுப்பி, சேது சமுத்திரத் திட்டத்தை முடக்கி வைக்கும் முயற்சியில் இறங்கின. இது தொடர்பாக வழக்கு ஒன்றும் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது. இதில் சேது சமுத்திரக் கால்வாய்க்கான அகழ்வுப் பணிகள் தொடர்கையில், பிரச்சினையாக ஆக்கப்பட்டுள்ள மணல் திட்டை சேதப்படுத்தக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது.

நீதிமன்ற தடை உத்தரவை நீக்கி, திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கான முயற்சிகள் எடுப்பதற்கு மாறாக, மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைத் திரும்பப் பெற்றது. இடைக்கால தடை நீடிப்பதற்கு வழிவகுத்தது. இந்த திட்டப்பாதை குறித்து மறு ஆய்வு மேற்கொள்வதாக உத்தரவாதம் அளித்து, அதற்கு கால அவகாசம் கோரியது.

சேது சமுத்திரத்திட்டம் தேவைதான் ஆனால், மக்களின் நம்பிக்கைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் தொல்லியல் ஆய்வுகள் பலவும் நடத்தி முடிக்க 6ஆண்டுகள் வரை தேவைப்படும் என்றும் காங்கிரஸ் தரப்பில் கருத்துகள் வெளியிடுவது தொடர்கிறது.

எனவே, இத்தகைய ஊசலாட்டங்களை களைந்து, சேது சமுத்திரத் திட்டத்தை உறுதியாகவும், துரிதமாகவும் நிறைவேற்றி முடிக்குமாறு இந்திய கம்யூனிஸ்டு மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகளின் மாநிலக் குழுக்கள் சார்பாக மத்திய அரசை வலியுறுத்துகிறோம். என்றுள்ளது.

## நாளை

| | |
|---|---|
| மாசி - 02 | 14.02.2008 வியாழக்கிழமை |
| திதி : அட்டமி | முன்னிரவு 08.56 வரை |
| நட்சத்திரம் : | கார்த்திகை பின்னிரவு 01.26 |
| சுபநேரம் : | 08.03-09.33 |
| ராகுகாலம் : | 02.03-03.33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழி தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம்** 19, முருகேசர் லேன், நல்லூர். (70893)


## 31ஆம் நாள் நினைவு கூரலும் நன்றி நவிலலும்



திருமதி

**கனகரத்தினம் கனகம்மா**

(நாவற்குழி)

மலர்வு 09*04*1922

உதிர்வு 14*01*2008

(71037)

கடந்த 14.01.2008 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்ப விளக்கு அணைந்த செய்தி அறிந்து வந்து துயர் பகிர்ந்தோர், ஆறுதல் கூறியோர் மற்றும் பல வழிகளில் உதவிகள் நல்கியோர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (13.02.2008) புதன்கிழமை திருகோணமலை, இல.24, பேராலய வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறுகிறது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நிரந்தர வதிவிடம்:
நாவற்குழி.

தற்போதைய முகவரி:
651/6, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## வடமராட்சி பிரதேச கலாசாரப் பேரவையின் மலர் வெளியீடு

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் பிரதேச மலரான 'திருவுடையாள்' வெளியீட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசஅதிபர் கே.கணேஸ் கலந்து கொள்வார்.

மலர் ஆசிரியர் கி.நடராசாவின் அறிமுகவுரை, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவின் வெளியீட்டுரை, கலாநிதி க.குணராசா, கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் ஆகியோரின் மதிப்பீட்டுரை, கலாநிதி த.கலாமணியின் ஏற்புரையும் இடம்பெறவிருக்கின்றன.

முதல் பிரதியை யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி பெறுவார். (1)

## நற்பண்புச் செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப்.13

இந்து சமயகலாசார அலுவலர்கள் திணைக்களத்தால் தீவக பிரதேசத்தில் புண்ணிய கிராம வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் ஒருநாள் நற்பண்பு செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு காரைநகர் திக்கரை முருகமூர்த்தி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

## தெல்லிப்பழை வைத்தியசாலை அபிவிருத்திக்கு நிதி உதவி

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அறங்காவல் சபையால் பிறந்தநாள் அறக்கொடை நிதியிலிருந்து 50ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.சிவராணி இதனை பெற்றுக் கொண்டார். வைத்தியசாலையின் அபிவிருத்தி வேலைகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று கூறப்பட்டது. (203-135)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 * 01 * 1918



மறைவு 23 * 02 * 2007

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **வேலுப்பிள்ளை சின்னையா**

எங்கள் அன்பு ஐயா
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மை விட்டு அகலாது.

41/4, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை. (71043)

தகவல்:
குடும்பத்தினர்.


## சாட்ஸ்-ரெக் நிறுவனத்தின் செய்மதி தொலைக்காட்சித் துறையின்

**20 ஆவது வருட நிறைவையும் யாழ்.விற்பனை நிலையத்தின் 7ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு**



சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சண் T.V.,K.T.V., விஜய்T.V., சண்மியூசிக், சண்நியூஸ், சுட்டிT.V., ராஜ்T.V., ராஜ் Digital இசையருவி, விண்T.V., மெகாT.V., தமிழன்T.V., S.S.மியூசிக் உட்பட 181 மற்றும் 102 சானல்களைக் கண்டுகளிக்கக்கூடிய டிஸ் T.V. பக்கேஜ்கள் மிகக்குறைந்த விலையில்!

தங்களின் மேலான ஆதரவுக்கான எமது நன்றிகளுடன்



Dish TV (Freedom plus) 102 சானல்கள் (ஒருவருட இலவசக் கட்டணம்) ரூபாய் 12500/-



Dish TV (MAXI) 181 சானல் (5 மாத இலவசக் கட்டணம்) ரூபாய் 12000/-

மேலதிக விவரங்களுக்கு:
SATS- TECH ENGINEERS
No: 182, K.K.S.வீதி,
(குளப்பிட்டி சேச் அருகில்) கொக்குவில்.

Phone: 021 222 5908, Hot Line: 0777- 710785 E.mail:Satstech@yahoo.com

★SATS- TECH இந்தியாவில் SSIமற்றும் இலங்கையில், TRCஅனுமதி பெற்ற நிறுவனமாகும்.
★Dish TVக்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்தித் தரப்படும்.
★விரைவில் SATS- TECHதலைநகர் கொழும்பிலும் உதயம்.
★கேபிள் TVக்குரிய உதிரிப்பாகங்கள், டிஸ் அன்ரனாக்கள் அனைத்திற்கும் விசேட விலைக் கழிவு.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 04 . 11 . 1928



உதிர்வு 14 . 01 . 2008

தையல் எனும் பெயர் கொண்ட நாயகியே
எண்ணத்துள் உறைகின்ற எழிலவளே
உன் தோன்றல்கள் பாரினில் உறைந்து நிற்க
உன் நாயகன் அடிதனில் சேர்ந்தாயோ
அகில மதில் நாம் உயர வழிகள் செய்தீர்
அயல் நாட்டிலும் கதறுகின்றோம் உமை நினைத்து
உன் வதன முகம் எங்கு காண்போம்?
பார்தனில் மீண்டும் ஒரு முறை வாராயோ!

கடந்த 14ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமக்குப் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (13.02.2008) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிருவத்தம்பை,
ஊரிக்காடு. (70899)

குடும்பத்தினர்.

## திருமதி தையல்நாயகி காத்தலிங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டில்சான் அதிரடியில் வாகைசூடியது இலங்கை

## இந்தியா 8 விக்கெட்டுகளால் படுதோல்வி



வெற்றிக்கு வித்திட்ட டில்சான்

கான்பரா, பெப்.13

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடரின் நான்காவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி அதிரடியாக ஆடி இந்தியாவை டக்வோர்த் லூவிஸ் முறைப்படி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. ஆரம்ப வீரராகக் களமிறங்கிய திலகரட்ண டில்சான் அதிரடியாக ஆடி 59 பந்துகளில் 62 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து தனது அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் இந்தியா மற்றும் இலங்கை மோதும் போட்டி நேற்று கான்பராவில் நடைபெற்றது. இந்தப் போட்டி கடும் மழை காரணமாக மூன்றரை மணி நேரம் தாமதமாகத் தொடங்கியது. இதனால் 50 ஓவர்களுக்கு பதிலாக 29 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக இது நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார். ஷேவாக் மற்றும் டெண்டுல்கர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். இருவரும் அதிரடியாக ஆடி இந்தியாவுக்கு நல்ல தொடக்கத்தைத் தந்தனர்.

ஆனால், அணியின் ஓட்டஎண்ணிக்கை 45 ஆக இருந்தபோது ஷேவாக் 14 ஓட்டங்களுடன் குலசேகரவின் வேகத்தில் ஆட்டமிழந்தார். அவரை அடுத்து டெண்டுல்கரும் மஹ்ரூப்பின் பந்துவீச்சில் விரைவாக விக்கெட்டைப் பறிகொடுத்தார். அப்போது இந்தியா 49 ஓட்டங்களை எடுத்திருந்தது. டெண்டுல்கர் 30 பந்துகளில் 32 ஓட்டங்களை எடுத்தார்.

இதனையடுத்து காம்பீர் மற்றும் ரோஹித் சர்மா ஜோடி சேர்ந்து ஆடினர். இருவரும் இணைந்து இந்தியாவின் ஓட்டஎண்ணிக்கையை 113 ஆக உயர்த்தியபோது கம்பீர் 35 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' ஆனார்.

தொடர்ந்து இணைந்த ரோஹித் சர்மா மற்றும் டோனி ஆகியோர் விளாசல் ஆட்டமாடி ஓட்டம் குவித்தனர். எனினும் டோனி 31 ஓட்டங்களில் 'ரன் அவுட்' ஆனார். அவரை அடுத்து ஆட வந்த யுவராஜ் சிங் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 29 ஓவர்களில் இந்தியா 5 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களைக் குவித்தது. ரோஹித் சர்மா 64 பந்துகளில் ஒரு சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனையடுத்து இலங்கை வேற்றி பெற 196 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. எனினும், மீண்டும் மழை குறுக்கிட்டதை அடுத்து இலங்கை அணிக்கான வெற்றி இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது. அந்த அணி 21 ஓவர்களில் 154 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்த இலக்கை எதிர்கொண்டு ஆடத் தொடங்கிய இலங்கை 19 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 154 ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெற்றது. அணியின் ஆரம்ப வீரரான ஜெயசூரியா 13 பந்துகளில் 27 ஓட்டங்களை (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) பெற்றுக்கொடுத்து இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்து குமார் சங்ககார 10 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் சுழலில் வெளியேறினார்.

3ஆவது விக்கெட்டில் இணைந்த டில்சான் - மஹேல ஜோடி அணியை வெற்றிக்கரை சேர்த்தது. டில்சான் 62 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தனே 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இறுதியில் இலங்கை அணி 19ஆவது ஓவரின் முடிவில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவுசெய்தது

ஆட்டநாயகனாக திலகரட்ண டில்சான் தெரிவானார்.

# ரைடர், மக்கியூலம் விளாசல் அடங்கியது இங்கிலாந்து அணி

## 2ஆவது ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து 10 விக்கெட்டுகளால் வெற்றி

ஹமில்ரன், பெப்.13

ஜெஸி ரைடர், பிரண்டன் மக்கியூலம் ஆகியோர் விளாசல் ஆட்டத்தை வெளிப்படுத்த இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

ஹமில்ரனில் நேற்று நடந்த இந்தப் போட்டியில் நியூஸிலாந்தின் வெற்றியிலக்காக 36 ஓவர்களில் 165 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அணியின் ஆரம்ப வீரர்களான ஜெஸி ரைடர் மற்றும் பிரண்டன் மக்கியூலம் ஆகியோர் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட நியூஸிலாந்து வெற்றி நோக்கி இலகுவாகப் பயணித்தது.

இங்கிலாந்து களத்துடுப்பாளர்கள் மிகவும் மோசமாகச் செயற்பட ஆரம்பவீரர்கள் இருவரும் இலகுவாக ஓட்டங்களைக் குவித்தனர். இங்கிலாந்து வீரர்கள் 3 பிடியெடுக்கும் வாய்ப்பை நழுவவிட்டிருந்தார்கள். ஒவருக்கு 9 ஓட்டங்களுக்கு மேல் பெற்ற ஆரம்பவீரர்கள் இருவரும் அணியை 18.1ஆவது ஓவரில் வெற்றிக் கரை சேர்த்தனர்.

ஜெஸி ரைடர் 62 பந்துகளில் 11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 79 ஓட்டங்களையும், பிரண்டன் மக்கியூலம் 47 பந்துகளில் 8 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 80 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

முன்னதாக, முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணிக்கப்பட்டிருந்த இங்கிலாந்து அணி, மத்திய வரிசை வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டத்தால் 158 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்திருந்தது. ஒரு கட்டத்தில் 90 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகள் மட்டுமே இழந்திருந்த அந்த அணி, நியூஸிலாந்துப் பந்துவீச்சாளர்களின் சிறப்பான செயற்பாட்டால் 158 ஓட்டங்களுக்குள் அடங்கிப் போனது.

இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்ரியர் குக் 53 ஓட்டங்களையும், பீற்றர்ஸன் 29 ஓட்டங்களையும், போபரா, போர்ட் ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். நியூஸிலாந்தின் பந்துவீச்சில் கிறிஸ் மாட்டின், மைக்கல் மாஸன், டானியல் விக்ரோறி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மில்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஜெஸி ரைடர் தெரிவானார். நேற்றைய போட்டி மழை காரணமாக அணிக்கு 36 ஓவர்களாக மாற்றப்பட்டிருந்தது.

இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

# அணுத்திட்டப் பணிகளை ஈரான் துரிதப்படுத்தும்

## அந்நாட்டு ஜனாதிபதி அறிவிப்பு



தெஹ்ரான், பெப்.13

"ஈரான் அணுத்திட்டப் பணிகளைத் துரிதப்படுத்தும். இப்பணிகள் காலதாமதப் படுத்தப்படமாட்டா. அதேவேளை, ஈரானிய அண்டவெளி ஆய்வுத் திட்டத்தின் கீழ் மேலும் ரொக்கெட்டுகள் ஏவப்படும்."

- இவ்வாறு உறுதிபடக் கூறியிருக்கின்றார் அந்நாட்டின் கடும்போக்கு ஜனாதிபதியான மஹ்மூத் அஹமதிநிஜாத்.

தலைநகரான தெஹ்ரானில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த இஸ்லாமியப் புரட்சியின் 29 ஆவது வருடாந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சிக்கு முன்னர் தலைநகரில் பாரிய பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். வாகனப் போக்குவரத்துகளும் தடைப்பட்டன.

பேரணியினர் "அமெரிக்காவுக்கு மரணம்", "இஸ்ரேல் ஒழிக" என கோஷங்களை எழுப்பியவாறு நகர்ந்தனர். இவர்களால் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், இஸ்ரேலியப் பிரதமர் ஈகுட் ஒல்மேர்ட் ஆகியோரின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன. இதையடுத்து வருடாந்த நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

தலைநகரில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநிஜாத் தொடர்ந்து பேசுகையில், "நான் மக்களின் கருத்தைக் கேட்கின்றேன். அணுத்திட்டத்தை நான் கைவிடுவதையோ எதிரிகளின் அழுத்தத்துக்காக விட்டுக் கொடுப்பதையோ எதிரிகளிடம் சரணாகதி அடைவதையோ நீங்கள் விரும்புகிறீர்களா?" - எனக் கேள்விகள் எழுப்பினார்.

திரண்டிருந்த மக்கள் "இல்லை, அணு சக்தியைப் பெறுவதும் பெருக்குவதும் எமக்குரிய உரிமை. எமது உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது" என ஆர்ப்பரித்தார்கள்.

இதையடுத்து தமதுரையைத் தொடர்ந்த ஜனாதிபதி, "இன்று அண்டவெளிக்கு ஒரு செய்மதியை ஏவுவதற்குத் தேவையான அனைத்து மூலப் பொருள்களும் எம்மிடம் உள்ளன. அனைத்து அம்சங்களும் எம்மால் உருவாக்கப்பட்டவை" - என்றும் தெரிவித்துக்கொண்டார்.

இதேவேளை, ஈரானிய நாடாளுமன்றத் தேர்தல்கள் மார்ச்சில் நடைபெறவுள்ளன. இச் சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற இந்த வருடாந்த நிகழ்ச்சி கடும்போக்காளரான ஜனாதிபதியின் செல்வாக்கையும் அவருக்குள்ள நாட்டு மக்களின் ஆதரவையும் துலாம்பரமாக எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

# ஆப்கானுக்கான பாக். தூதுவர் இரு நாட்டு எல்லையில் மாயம்

காபூல், பெப்.13

ஆப்கானிஸ்தானிற்கான பாகிஸ்தான் தூதுவர் தரிக் அசிசியுடின் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் காணாமல் போயுள்ளார்.

இதேவேளை, தூதுவர் ஆப்கான் எல்லையில் உள்ள கைபர் பழங்குடி பகுதியிலுள்ள தீவிரவாதிகளால் கடத்தப்பட்டாரென பி.பி.ஸி. தெரிவித்துள்ளது. திங்கட்கிழமை தூதுவருடனான தொடர்பு இல்லாமல் போனதாக பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

பெசாவரிலிருந்து காபூலுக்கு வீதி வழியாக காரில் சென்று கொண்டிருக்கையிலேயே தூதுவர் காணாமல் போயுள்ளார். பாகிஸ்தானின் கைபர் கணவாயைச் சேர்ந்த பொலிஸாரும் தூதுவர் கடத்தப்பட்டிருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தூதுவர் டரிக் அசிசியுடினின் வாகனம் எல்லைப்பகுதி சோதனைசாவடியில் நிறுத்தாமல் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாகிஸ்தான் தூதுவர் தனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை புறக்கணித்து விட்டுச் சென்றதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# கிழக்குத் திமோரில் அவசரகால நிலை பிரகடனம் சூட்டுக்கு இலக்கான ஜனாதிபதி தேறிவருகிறார்

டிலி, பெப்.13

கிழக்குத் திமோர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலையடுத்து அந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையைத் தணிப்பதற்காக அங்கு அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கான கிழக்குத் திமோர் ஜனாதிபதி ஜோஸ் ரெமோஸ் - ஹோர்ட்டா, உடல் நிலை தேறிவருகிறார் என்றும் விரைவில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களிலிருந்து குணமடைந்து விடுவார் எனவும் ஆஸ்திரேலிய டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

அதேவேளை, கிழக்குத் திமோரில் பதில் ஜனாதிபதியால் அவசரகாலச்சட்ட அமுலாக்கம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸாருக்கான அதிகாரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. "ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வீடுகளில் தேடுதல் வேட்டைகளை மேற்கொள்ளவும் பொலிஸாருக்கு அதி[illegible]ட்டுள்ளது." என பதில் ஜனா[illegible] செவ்வாய்க்கிழமை தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு ஆற்றியவுரையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், கிழக்குத் திமோர் ஜனாதிபதி மீதான தாக்குதலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# எவரெஸ்ட் விமானநிலையத்துக்கு எட்மண்ட் ஹிலாரியின் பெயர்

காத்மண்டு, பெப்.13

உலகிலேயே உயர்ந்த மலையான எவரெஸ்ட்டில் முதன்முறையாக 1953ஆம் ஆண்டு நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரியும், நேபாளத்தைச் சேர்ந்த டென்சிங் நார்கே ஷெர்பாவும் ஏறி சாதனை படைத்தனர். டென்சிங் 1986 ஆம் ஆண்டும், எட்மண்ட் ஹிலாரி கடந்த மாதமும் இறந்துவிட்டனர். இந்நிலையில் அவர்களின் நினைவாக எவரெஸ்ட் அருகே லுக்லா என்ற இடத்தில் உள்ள விமான நிலையத்துக்கு எட்மண்ட் ஹிலாரி - டென்சிங் ஆகியோ[illegible] நேபாள அரசு சூட்டியுள்ளது.

# தாய்லாந்து விடுதிகளில் புகைபிடிப்பதற்குத் தடை

பாங்கொக், பெப்.13

தாய்லாந்து நாட்டு இரவு விடுதிகளில், புகைபிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில், 2002 ஆம் ஆண்டு பொது இடங்களில் செயல்படும் உள்ளரங்குகளில் புகை பிடிக்கத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், அங்குள்ள இரவு விடுதிகள், மதுபான நிலையங்கள், கேளிக்கை நிகழ்ச்சிகள் நடக்கும் அரங்குகள் ஆகியவற்றுக்கு, இதில் விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. தற்போது, தாய்லாந்து அரசு புதிய உத்தரவை வெளியிட்டுள்ளது.

இதன்படி, இரவு விடுதிகள், கேளிக்கை நிகழ்ச்சிகள் நடக்கும் அரங்குகள், மதுபான நிலையங்கள் ஆகியவற்றிலும் இனி, புகை பிடிக்க முடியாது. இச்சட்டம், நேற்றுமுன் தினத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ளது.

தாய்லாந்து அரசின் இந்த அதிரடி உத்தரவால், இரவு விடுதி உரிமையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கவலை அடைந்துள்ளனர். இரவு விடுதி உரிமையாளர்கள், 'இரவு விடுதிகளில், புகைபிடிப்போருக்கு எதிராக, இதுவரை புகார் எதுவும் வந்தது இல்லை. அரசின் புதிய உத்தரவால், எங்களது வியாபாரம் கடுமையாகப் பாதிக்கப்படும்.' - என்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சம்பூரிலிருந்து மாற்றம்:**

# திருமலை கப்பல்துறையில் இன்று அனல் மின்நிலையத்துக்கு அடிக்கல்

திருகோணமலை,பெப். 13

திருகோணமலையில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையத்துக்கான அடிக்கல் இன்று நடப்படவுள்ளது.

படையினரால் மீட்கப்பட்ட சம்பூர் பிரதேசத்தில் இந்த அனல் மின்நிலையத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் ஆரம்பத்தில் நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆயினும், அந்தப் பிரதேசத்தில் மின் நிலையத்தை அமைப்பதற்கு இந்தியா விருப்பம் தெரிவிக்கவில்லை. அதனையடுத்து மின் நிலையத்தை நகரில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் கப்பல்துறை என்னும் இடத்தில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அதிகாரியான எஸ்.சங்கரலிங்கம், மின்சக்தி அமைச்சர் டபிள்யூ. ஜே. செனவிரத்தின ஆகியோர் இணைந்து இன்று முற்பகல் 10 மணிக்கு மின் நிலையத்துக்கான அடிக்கல்லை அங்கு நடவுள்ளனர். (அ-1-151)

# புலிகளின் பகுதிக்கு பொருள்களை கடத்த முயன்றவர்கள் மீது சூடு!

## மன்னாரில் படையினர் நடவடிக்கை

மன்னார்,பெப்.13

மன்னார், எழுத்தூர், பெரியகமம் கடற்கரையில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கென படகு ஒன்றில் பொருள்களை ஏற்றிக் கொண்டிருந்தனர் என்று கூறப்படுவோர் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஜெ.டினுசன் (வயது - 20) என்பவரே படுகாயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் பின்னர் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அப்பகுதியில் உள்ள வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன எனக் கூறப்படும் பல பொருள்களும் படையினரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிமெந்துப் பைக்கெட்டுகள், கடைச்சல் கருவிகள், மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள், கணனிகள், சைக்கிள் 'போல்ஸ்', டி.வி.டி பிளேயர் மற்றும் மின்சாரப் பொருள்கள் என்பவற்றையே பொலிஸார் மீட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. (சி)

# பிரஜைகள் விழிப்புக் குழுக்கள் அமைக்கும் பணி நாளை ஆரம்பம்

நாட்டிலுள்ள14ஆயிரத்து 993 கிராம சேவையாளர் பிரிவுகளதும் பிரஜைகள் விழிப்புக் குழுக்கள் அமைக்கும் பணிகள் நாளை 14 ஆம் திகதி ஆரம்பமாகும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதுபற்றிஅவர்மேலும்கூறியவை வருமாறு:-

பயங்கரவாதிகளின் தாக்குதல்களிலிருந்தும் நாசகார குழுக்களின் செயற்பாடுகளிலிருந்தும் மக்களை பாதுகாக்கும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் ஆலோசனைகளுக்கிணங்க நாட்டிலுள்ள 14 ஆயிரத்து தொளாயிரத்து 93 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

நாளை இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.பொலிஸ் - பொதுமக்கள் உறவுகளைப் பயன்படுத்தி கிராமங்கள் தோறும் பாதுகாப்பை பலப்படுத்துவதுடன்,பயங்கரவாத செயற்பாடுகளையும், அதனுடன் தொடர்புடைய நபர்களையும் இனங்காணும் பொருட்டும், மக்களை விழிப்பூட்டுவதற்கும் பிரஜைகள் விழிப்புக் குழுக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். - என்றார்.

# கடத்தப்பட்ட வர்த்தகர் அடுத்த நாளே விடுவிப்பு

கொழும்பு,பெப்.13

நீர்கொழும்பு கடற்கரை வீதியில் நேற்று முன்தினம் மாலையில் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டார் என்று கூறப்படும் வர்த்தகர் ஒருவர் நேற்று மினுவாங்கொடைப் பகுதியில் வைத்து விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமலன் என்ற பிரபல வர்த்தகர் தனது காரில் இருந்து இறங்கி தனது இல்லத்திற்குள் சென்ற சமயம், வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நேற்று விடுவிக்கப்பட்ட அவரிடமிருந்து பொலிஸார் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொண்டனர் என்றும், இக்கடத்தல் தொடர்பாக அவர்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## சமாதானம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பிட்டுள்ள புலனாய்வு வட்டாரங்கள் அது வந்து விழுந்து வெடிக்கும் பிரதேசத்தில் 50 மீற்றர் முதல் நூறு மீற்றர் வரையுள்ள சுற்றுப் பகுதியில் பேரழிவையும் பெரு நாசத்தையும் ஏற்படுத்தும் என்றும் கருதுகின்றனர் எனத் தெரிகின்றது.

இந்த மோட்டார் அல்லது ஷெல்லின் ஏவு வீச்சு எவ்வாறு என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

அத்துடன், ஏவுகணைப் பொறிமுறையை அல்லது பீரங்கிப் பொறிமுறையை அல்லது இந்த இரண்டையும் ஒரே சமயத்தில் பயன்படுத்தி இதனை ஏவுவதற்கான ஓர் உத்தியை தொழில்நுட்ப ரீதியில் புலிகள் உருவாக்கியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறதாம்.

90 களில் 'பசீலன்' என்ற உள்ளூர் தயாரிப்பு பாரிய ஷெல் மூலம் யுத்த முனைகளில் புலிகள் பெரும் சேதத்தையும் படையினருக்குப் பீதியையும் விளைவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைக் கடத்திவர முடியாத முற்றுகைக்குள் சிக்கியிருக்கும் புலிகள், தாமே தங்களுக்குரிய இத்தகைய ஆயுதங்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவு அரச உயர்மட்டத்துக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (சி)

## ஏ.பி.செய்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட படப்பிடிப்பாளர் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-10)

## நாடு திரும்பினார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் லக்ஷ் மன் கிரியெல்ல, ஜயலத் ஜெயவர்த்தன, லக்ஷ்மன் செனவிரட்ண மற்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் பிரபா கணேசன், கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான குமரகுருபரன், எல்.இராஜேந்திரன் ஆகியோருடன் மேலக மக்கள் முன்னணியின் உறுப்பினர் சிலரும் வரவேற்றனர்.

அதன்பின்னர் மனோகணேசன் எம்.பியுடன், அவரை வரவேற்கச் சென்ற குழுவினர் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபதி சூரியாராய்ச்சியின் கந்தானை இல்லத்திற்கு நேரடியாகச் சென்று அவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். (சி)

## பீரங்கி, பல்குழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை பாதிக்கப்பட்டது. அரச திணைக்களங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் செயலிழந்தன.

மன்னார் - வவுனியா, மன்னார் - மதவாச்சி வீதி ஊடான போக்குவரத்துகளும் தடைப்பட்டன.

பல்வேறு முனைகளில் இருந்தும் பீரங்கிக் குண்டுகள் பாய்ந்து சென்றதை அடுத்து, ஒரே சமயத்தில் பலமுனைகளில் படையினர் முன்நகர்வுகளை ஆரம்பித்து விட்டனர் என்று பரவிய செய்தியும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

தள்ளாடி, திருக்கேதீஸ்வரம் மற்றும் மன்னார் - மதவாச்சி வீதியில் உயிலங்குளம் போன்ற பல இடங்களில் இருந்தும் பல்குழல் ஏவுகணைகளும் சீறிப் பாய்ந்தன.

அடுத்தடுத்து பேரொலி எழுப்பியபடி பாய்ந்த இந்தப் பல்குழல் ஏவுகணையின் அதிர்வை, மன்னார்ப் பகுதி மக்கள் நேற்று முதன் முதலில் அனுபவித்து திகிலடைந்தனர்.

நேற்றுப் பிற்பகலுக்குப் பின்னர் வழமை நிலை திரும்பி,நகரில் ஓர் அசாதாரண அமைதி நீடித்தது. (உ)

## மேற்கு நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக் கையில் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த வாரம் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் இலங்கைக்கான நோர்வே தூதுவரை கொழும்பில் சந்தித்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜூலியன் வில்ஸனையும் அவர்கள் தனியாகச் சந்தித்து நிலைமைகளை விளக்கினர்.

இன்று இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக்கையும் கூட்டமைப்பினர் சந்திக்கின்றனர்.

இச்சந்திப்பு இன்று காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இலங்கையில் உள்ள மற்றும் பல மேற்கு நாட்டுத் தூதுவர்களையும் கூட்டமைப்பினர் சந்திக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(சி)

## ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக ஹைட்பார்க் மைதானத்தை வந்தடைந்து, அங்கிருந்து கொழும்பு, நகர சபையின் முன்னால் உள்ள ஜே.ஆர். ஜெயவர்த்தன நிலையத்தில் அது முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டது. அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் இடம்பெறும்.

இந்தப் பாதயாத்திரையை 5 ஊடக அமைப்புகளுடன் இணைந்து தொழிற்சங்கங்களும் மற்றும் சமூக அமைப்புகளும் ஏற்பாடு செய்திருக்கின்றன. (சி)

## கொழும்புத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் முறியடித்ததாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்வேறு பகுதிகளில் இருந்தும் கொழும்புத்துறை மற்றும் அதனை அண்டிய கரையோரப் பகுதிகள் நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

கரையோரப் பகுதியில் ஷெல்கள் மற்றும் துப்பாக்கிச் சன்னங்கள் விழுந்தமையால் அப்பகுதி மக்கள் அங்கிருந்து பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து இச்செய்தி எழுதப்படும் வரை விரிவான தகவல்கள் வெளியாகவில்லை. (அ-1-202)

## தள்ளாடி இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து புலிகள் முதல் தடவையாக மேற்கொண்டுள்ள இந்தப் பீரங்கித் தாக்குதல் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

புலிகளின் தாக்குதல்களில் தள்ளாடித் தளத்தின் சில காவல் நிலைகள் எரிந்துள்ளன என்றும் -

உயிரிழந்த மற்றும் காயமுற்றோரின் எண்ணிக்கை வெளியே அறிவிக்கப்பட்டதை விட அதிகம் என்றும் -

மன்னார் செய்திகள் தெரிவித்தன.

**படைத்தரப்புத் தகவல்**

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்துள்ள கத்தோலிக்கத் தேவாலயப் பகுதியிலேயே புலிகள் ஏவிய எறிகணை வீழ்ந்து வெடித்தன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

"நேற்று முன்தினம் திங்கட்கிழமை கத்தோலிக்க குருமார் சிலர் எம்மிடம் வந்து தேவாலய வளவில் ஒரு சமய வைபவம் நடத்தவிருப்பதாகவும் அதற்கு ஆலய வளவைத் துப்புரவு செய்து தருமாறும் கேட்டுக்கொண்டனர்.

அதனை அடுத்து அந்தத் தேவாலயத்தைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருந்த 25 இராணுவத்தினர் மீதே நேற்று செவ்வாய்கிழமை காலை எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் 15 குண்டுகள் ஆலய வளாகத்தில் வீழ்ந்து வெடித்தன. புலிகளின் பீரங்கி நிலைகளை நோக்கி நாங்களும் பதில் தாக்குதலை நடத்தி அதனை முறியடித்தோம் - என்றார் உதய நாணயக்கார.

இந்தச் சம்பவத்தில் 15 படையினர் உயிரிழக்க ஐம்பதுக்கும் அதிக படையினர் காயமடைந்துள்ளனர் என்று புலிகள் சார்பு இணையத் தளம் ஒன்று தகவல் வெளியிட்டது.

புலிகளின் பீரங்கிகள் தள்ளாடிப் பகுதியில் வந்து விழுந்து வெடித்ததை அடுத்து அப்பக்கத்திலிருந்து புழுதி மற்றும் புகை மண்டலம் எழுந்ததைத் தாங்கள் அவதானித்தனர் என மன்னார் வாசிகள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் தள்ளாடி முகாமுக்கு அருகில் இருந்த புனித செபஸ்தியார் தேவாலயமும் சேதமுற்றதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தள்ளாடி முகாம் புலிகளின் ஆட்லறிக்கு இலக்காகியிருப்பது இப்பிரதேச யுத்தப் போக்கில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியிருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இதேவேளை -

அரசின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் 6 படை யினர் கொல்லப்பட்டனர் என்றும் 18 படையினர் காயமடைந்தனர் என்றும் படைத்தரப்பை மேற்கோள் காட்டி தகவல் வெளியிடப்பட்டது. (அ-2-சி)

சர்வதேசரீதியில் (இலங்கையிலும்) முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Company Accounts இனையும் உள்ளடக்கி

Diploma in Computerized Accounting

ACCPAC + Quick Books Premier + MYOB

கற்கைநெறியின் நன்மைகள்:
1. Accounts இனை கணனிமயப்படுத்தல் தொடர்பான முழுமையான விளக்கம்
2.Multy User Accounting Software களில் Network இலான கணக்குபதிவு முறைகள்.
3. VAT தொடர்பான கணக்குபதிவு முறைகள்.
4. வரையறையற்ற செய்முறை பயிற்சிகளுடன்...!

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 14/02/2008 09.00-10.00
Batch II : 17/02/2008 03.00-04.00
Batch III: 19/02/2008 09.00-10.00

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE : 021-222 8250 , 0777 222 422

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி யாழ்.
கிளை. 417, K.K.S. வீதி (யாழ்/இந்துக்கல்லூரி அருகில்).
பிரிவு I
O/L DAY CLASS (8.30, -2.30)
ஆரம்பம்:- 15.02.2008
திறமையும் அனுபவமும் நிறைந்த ஆசிரியர் குழாமின் ஒருங்கிணைந்த சேவையைக் கொண்ட தன்னிகரில்லாத நிறுவனம்.

VACANCY
A VACANCY EXISTS FOR A COMPUTER PROGRAMMING LECTURER IN A PRESTIGOUS COMPUTER ORGANIZATION: PLEASE APPLY WITH BIO DATA AND CONTACT TELEPHONE NUMBER BEFORE 20/02/2008.
Advt. No. 3061
C/O UTHAYAN.

தமிழ்
A.K.சித்திரராஜன் B.A(Hons)
A/L 2010
இலக்கணம்
ஆரம்பம்:
13.02.08
4 p.m.
வேறு பிரிவு மாணவர்களும் இணையலாம்.
ஐடியல் அக்கடமி
நீராவியடி யாழ்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org